# தினபூமி

thinaboomi.com

பூமி: 26 சுற்று: 49 ஆடி 14

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், புதன், ஜூலை 30, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**தாய்லாந்து-கம்போடியா போர்நிறுத்தம்: சமாதானத்தின் தலைவராக இருப்பதில் பெருமைப்படுகிறேன்: அதிபர் ட்ரம்ப்**

....2-ம் பக்கம்

**ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் டிஜிட்டல் பரிவர்த்தனையில் முக்கிய மாற்றங்கள் அமல்**

...3-ம் பக்கம்

**5-வது டெஸ்ட்: இந்திய அணியில் அறிமுகமாகிறார் இடது கை பந்துவீச்சாளர் அர்ஷ்தீப் சிங்?**

...6-ம் பக்கம்






● சென்னை தலைமைச்செயலகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டை சேர்ந்த கணினி அறிவியல் துறையிலுள்ள இறுதி ஆண்டு பயிலும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான கேம் டெவலப்பர், ஆர்டிஸ்ட், புரோகிராமர் திறன் பயிற்சி திட்டத்திற்காக உலகளாவிய நிறுவனமான கூகுள் மற்றும் யுனிட்டி நிறுவனத்தினருக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கும் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதில் குணால்சோனி, அதிதி சதுர்வேதி, கூடுதல் தலைமைச்செயலாளர் பிரதீப்யாதவ், மேலாண்மை இயக்குனர் கிராந்திகுமார் பாடி ஆகியோர் உடனிருந்தனர்.

### இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ள

# தமிழ்நாடு மீனவர்கள் 14 பேரை விடுவிக்க நடவடிக்கை தேவை

*** மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்**
*** உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தல்**

சென்னை, ஜூலை 30-

**இலங்கை கடற்படையால் தற்போது சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்கள் 14 பேரை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்த விவகாரத்தில் உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்கவும் வலியுறுத்தி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.**

**நான்காவது சம்பவம்...**

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 14 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய் சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் அவர் கூறி இருப்பதாவது; "இன்று (நேற்று - 29-07-2025) காலை இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் இயந்திரமயமாக்கப்பட்ட தங்களது மீன்பிடிப் படகுடன் சிறை பிடிக்கப்பட்டிருப்பதையும், மற்றொரு சம்பவத்தில் 9 மீனவர்கள் மோட்டார் பொருத்தப்பட்ட தங்களது நாட்டுப்படகுடன் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர். இந்த மாதத்தில் மட்டும் இது நான்காவது சம்பவமாகும்.

**இலங்கை காவலில்...**

இந்தத் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பெருத்த மனரீதியான மற்றும் பொருளாதார நெருக்கடியையும், வாழ்வில் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. தற்போது, 235 மீன்பிடிப் படகுகளும், 68 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளனர்.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, இலங்கை அதிகாரிகளின் பிடியில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை வெளியுறவு அமைச்சர் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி முர்மு எழுப்பிய 14 கேள்விகள்:

# ஆகஸ்ட் 19-ம் தேதி முதல் விசாரணை தொடங்கும்

**சுப்ரீம் கோர்ட் அறிவிப்பு**

புதுடெல்லி, ஜூலை 30-

***ஜனாதிபதி 14 கேள்விகள் எழுப்பிய விவகாரம் தொடர்பாக ஆகஸ்ட் 19ம் தேதி முதல் விசாரணை தொடங்கும் என்று சுப்ரீம் கோர்ட் அறிவித்துள்ளது. மேலும் மத்திய மற்றும் மாநில அரசுகள் வருகிற ஆகஸ்ட் 12-ம்தேதிக்குள் தங்களது எழுத்துப்பூர்வ வாதத்தை தாக்கல் செய்யுமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.***

தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் மசோதாக்கள் மீது கவர்னர்-ஜனாதிபதி முடிவு எடுக்க சுப்ரீம் கோர்ட் காலக்கெடு நிர்ணயம் செய்தது. இதுதொடர்பாக கடந்த ஏப்ரல் 8-ம் தேதி சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பில், மாநில சட்டசபை அனுப்பும் மசோதாக்கள் தொடர்பாக 30 நாட்கள் முதல் 3 மாதங்களுக்குள் கவர்னர் முடிவு எடுக்க வேண்டும். கவர்னர்கள் முதல்முறையாக அனுப்பி வைக்கும் மசோதாக்கள் மீது 3 மாதங்களுக்குள் ஜனாதிபதி முடிவெடுக்க வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட் தெரிவித்தது.

இதற்கிடையே சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த இந்த உத்தரவு தொடர்பாக ஜனாதிபதி திரவுபதி முர்மு தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி 14 கேள்விகளை எழுப்பி கடிதத்தை சுப்ரீம் கோர்ட்க்கு அனுப்பினார். இதுதொடர்பான வழக்கு தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையில் பி.எஸ்.நரசிம்மா, சூர்யகாந்த், விக்ரம்நாத், ஏ.எஸ். சந்தூர்கர் ஆகிய 5 நீதிபதிகளை கொண்ட அரசியல் சாசன அமர்வு முன்பு நடந்து வருகிறது. இவ்வழக் கில் கடந்த 22-ம்தேதி விசாரணைக்கு வந்த மத்திய அரசு மற்றும் அனைத்து மாநில அரசுகள் ஒரு வாரத்தில் பதில் அளிக்க சுப்ரீம் கோர்ட் உத்தர விட்டு வழக்கை 29-ம் தேதிக்கு தள்ளிவைத்தது. இதையடுத்து தமிழ்நாடு, கேரளா அரசுகள் பதில் மனுதாக்கல் செய்தன.

இந்த நிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு நேற்று வந்தது.

அப்போது ஜனாதிபதி எழுப்பிய கேள்விகள் தொடர்பான வழக்கில் கால அட்டவணையை தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு அறிவித்தது. இதில் மத்திய மற்றும் மாநில அரசுகள் வருகிற ஆகஸ்ட் 12-ம்தேதிக்குள் தங்களது எழுத்துப்பூர்வ வாதத்தை தாக்கல் செய்யுமாறு நீதிபதிகள் உத்தர விட்டனர். இந்த காலக்கெடுவை கண்டிப்பாக கடைபிடிக்குமாறு நீதிபதிகள் கேட்டு கொண்டனர்.

ஜனாதிபதி விளக்கம் கோரிய இவ்வழக்கின் விசாரணை ஆகஸ்ட் 19-ம் தேதி தொடங்கும் என்று தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு அறிவித்தது. இதில் தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங்கள் தாக்கல் செய்த ஆரம்ப ஆட்சேபனைகள் முதலில் விசாரிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் பரிந்துரையை ஆதரிக்கும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மனுக்கள் ஆகஸ்ட் 19, 20, 21 மற்றும் 26 ஆகிய தேதிகளில் விசாரிக்கப்படும் என்றும், ஜனாதிபதியின் பரிந்துரையை எதிர்க்கும் மனுக்கள் ஆகஸ்ட் 28 மற்றும் செப்டம்பர் 2, 3, 9 ஆகிய தேதிகளில் விசாரிக்கப்படும் என்றும் சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.

ஏதேனும் மறு சமர்ப்பிப்புகள் இருந்தால், செப்டம்பர் 10-ம்தேதி விசாரிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

### மருத்துவ சேர்க்கையில் ஓ.பி.சி. மாணவர்கள்:

# வரலாற்று முக்கியத்துவத்தை உரக்க சொல்வோம்: முதல்வர்

சென்னை, ஜூலை 30-

**மருத்துவ படிப்பில் ஓ.பி.சி. மாணவர்கள், இது பல குடும்பங்களின் தலைமுறைக் கனவு என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்த வரலாற்று முக்கியத்துவத்தை உரக்க சொல்வோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

இந்திய அளவில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு மருத்துவ சேர்க்கையில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க சட்டப் போராட்டம் நடத்தி, நீதியை வென்ற நாள் இன்று (நேற்று - ஜூலை 29). இந்தநிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பதிவில், 20,088 இடங்கள், பல குடும்பங்களின் பல தலைமுறைக் கனவு. சதிக்குக் கால் முளைத்துச் சாதியாகி உழைக்கும் மக்களை ஒடுக்கினாலும், விதி வலியது - இது தான் நம் தலையில் எழுதியது எனச் சுருண்டுவிடாமல், போராடி பெறும் உரிமைகளால் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் நமக்கான இடங்களை உறுதிசெய்கிறோம்.

சமூகநீதிக்கான இந்த அரசியலையும் - போராட்டத்தையும் நாம் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். நம் விரல்களைக் கொண்டே நம் கண்களைக் குத்தும் வித்தையறிந்தவர்கள் செய்யும் சூழ்ச்சி அரசியலை முறியடிக்க, இந்நாளின் வரலாற்று முக்கியத்துவத்தை உரக்கச் சொல்வோம் என பதிவிட்டுள்ளார்.



> **“சமூகநீதிக்கான இந்த அரசியலையும் - போராட்டத்தையும் நாம் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். நம் விரல்களைக் கொண்டே நம் கண்களைக் குத்தும் வித்தையறிந்தவர்கள் செய்யும் சூழ்ச்சி அரசியலை முறியடிக்க, இந்நாளின் வரலாற்று முக்கியத்துவத்தை உரக்கச் சொல்வோம்.”**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

### போரை நிறுத்துமாறு பாகிஸ்தான் கெஞ்சியது:

# தாக்குதலை நிறுத்துமாறு உலகின் எந்த தலைவர்களும் கூறவில்லை

**ஆபரேஷன் சிந்தூர் குறித்து பார்லி.யில் பிரதமர் விளக்கம்**

புதுடெல்லி, ஜூலை 30-

***போரை நிறுத்துமாறு பாகிஸ்தான் கெஞ்சியது என்று தெரிவித்த பிரதமர் மோடி, தாக்குதலை நிறுத்துமாறு உலகின் எந்த தலைவர்களும் கூறவில்லை என்று ஆபரேஷன் சிந்தூர் குறித்து பாராளுமன்ற மக்களவையில் விளக்கம் அளித்தார்.***



ஜம்மு மற்றும் காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் பலியானதற்கு பதிலடியாக, இந்தியா தரப்பில் இருந்து ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதுபற்றி விளக்கம் அளிக்கும்படி காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகள் மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில், பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் ஆபரேஷன் சிந்தூர் பற்றி விரிவாக விவாதம் நடத்தப்படும் என எதிர்க்கட்சிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு, மக்களவையில் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை பற்றி நேற்று விளக்கம் அளித்து பேசினார். இதனை தொடர்ந்து, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆபரேஷன் சிந்தூர் பற்றி அவையில் நேற்று பேசினார். இதேபோன்று, காங்கிரஸ் கட்சியின் பொது செயலாளரான எம்.பி. பிரியங்கா காந்தி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி ஆகியோரும் அவையில் நேற்று பேசினர்.

இதனை தொடர்ந்து, பிரதமர் மோடி ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை பற்றி நேற்று அவையில் பேசினார். அவர் பேசும் போது, ஜம்மு மற்றும் காஷ்மீரின் பஹல்காம் பகுதியில், ஏப்ரல் 22-ம் தேதி, அப்பாவி மக்களின் மதம் என்னவென்று கேட்டுவிட்டு, அவர்களை பயங்கரவாதிகள் சுட்டு கொன்ற சம்பவம் கொடூரம் வாய்ந்தது. அது கொடூரத்தின் உச்சம். இந்தியாவை வன்முறை தீயில் தள்ளுவதற்கான நன்றாக திட்டமிடப்பட்ட முயற்சி.

இந்தியாவில் வன்முறைகளை பரப்புவதற்கான சதி திட்டமே இது. அந்த சதி திட்டம், ஒற்றுமையால் முறியடிக்கப்பட்டு உள்ளது என்பதற்காக நான் நாட்டு மக்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன். ஏப்ரல் 22-ந் தேதி நான் வெளிநாட்டில் இருந்தேன். உடனடியாக நான் நாடு திரும்பினேன். திரும்பி வந்ததும், கூட்டம் ஒன்றை தலைமையேற்று நடத்தினேன். அப்போது, இது நம்முடைய தேசம் தொடர்பான விசயம். பயங்கரவாதத்திற்கு சரியான பதிலடி தரப்பட வேண்டும் என்று தெளிவாக அறிவுறுத்தினேன்.

என் மீது நம்பிக்கை கொண்ட 140 கோடி இந்தியர்களுக்கும் நான் நன்றி தெரிவித்து கொள்கிறேன். இந்தியாவின் பதிலடியை பாகிஸ்தானால் தடுக்க முடியவில்லை. அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு இந்தியா அடிபணியாது. அந்த மிரட்டல் இனி எடுபடாது. இந்தியா ஒருபோதும் பயப்படாது. பாகிஸ்தான் நாட்டின்

**(கடைசி பக்கம் பார்க்க)**

# பொதுத்தேர்வு கால அட்டவணை அக்டோபரில் வெளியிடப்படும்

**அமைச்சர் அன்பில் மகேஷ் தகவல்**

சென்னை, ஜூலை 30-

**காலாண்டு, அரையாண்டு தேர்வுக்கான அட்டவணையை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் வெளியிட்டார். மேலும், 2025 - 26-ம் கல்வியாண்டிற்கான பொதுத்தேர்வு கால அட்டவணை அக்டோபரில் வெளியிடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.**

2025-26 கல்வியாண்டுக்கான காலாண்டு, அரையாண்டுத் தேர்வு அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. 1 முதல் 12-ம் வகுப்புகளுக்கு செப்டம்பர் 18ல் தொடங்கி 26ம் தேதியில் காலாண்டுத் தேர்வு முடிவடைகிறது. செப்டம்பர் 27 முதல் 30-ம் தேதி வரை காலாண்டு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 15-ம் தேதி அரையாண்டுத் தேர்வு தொடங்கி 23-ம் தேதியுடன் நிறைவடைகிறது. டிசம்பர் 24 முதல் ஜனவரி 1 வரை அரையாண்டு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. 2025 – 26-ம் கல்வியாண்டிற்கான பொதுத்தேர்வு கால அட்டவணை அக்டோபரில் வெளியிடப்படும் என அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனையின்படி, கடந்தாண்டு போலவே 2025-2026-ம் கல்வியாண்டிற்கான பொதுத்தேர்வு கால அட்டவணை அக்டோபர் மாதம் வெளியிடப்படும். இத்துடன் பள்ளிக் கல்வித்துறையின் (2025-2026) நாட்காட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள காலாண்டு/அரையாண்டுத் தேர்வுக்கான தேதிகள் அடங்கிய பக்கங்களை இணைத்துள்ளோம். மாணவர்கள் மகிழ்ச்சியுடன் தன்னம்பிக்கையோடு தயார் ஆகுங்கள் என பதிவிட்டுள்ளார்.

### இன்று விண்ணில் பாய்கிறது:

# இஸ்ரோ- நாசா கூட்டு தயாரிப்பில் உருவான நிசார் செயற்கைக்கோள்


ஐதராபாத், ஜூலை 30-

**இஸ்ரோ நாசா.கூட்டு தயாரிப்பில் உருவான நிசார் செயற்கைக்கோள் இன்று விண்ணில் பாய்கிறது.**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மற்றும் அமெரிக்காவின் நாசாவின் முதல் கூட்டு செயற்கைக்கோளான நாசா-இஸ்ரோ செயற்கை துளை ரேடார் (நிசார்), இஸ்ரோவின் ஜி.எஸ்.எல்.வி-எப்16 ராக்கெட் மூலம் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து இன்று (புதன்கிழமை) மாலை 5.40 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது.

ராக்கெட்டை விண்ணில் ஏவுவதற்கான 28 மணி நேர கவுண்டவுன் நேற்று (செவ்வாய்க்கிழமை) பகல் 1.40 மணிக்கு தொடங்கியது. இது குறித்து இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் கூறும் போது, 'இஸ்ரோ-நாசா இணைந்து பூமியைக் கண்காணிக்கும் ரேடார் செயற்கைக்கோளான 'நிசார்' செயற்கைக்கோளை உருவாக்கி யுள்ளன. இந்த செயற்கைக்கோள் 12 நாட்களுக்கு ஒரு முறை உயர் தெளிவுத்திறன் கொண்ட பூமித் தரவுகளை வழங்கும்' என்றார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 446.93 | 140.20 |
| பாயின்ட் 81,337.95 | பாயின்ட் 24,821.10 |



| தங்கம் | |
|---|---|
| 1 சவரன் | ₹73,200 |
| 1 கிராம் | ₹9,150 |



| வெள்ளி | |
|---|---|
| 1 கிலோ | ₹126,000 |
| 1 கிராம் | ₹126.00 |

டாலர் ₹86.99



| பெட்ரோல் | ₹102.63 |
|---|---|
| டீசல் | ₹94.24 |

### தாய்லாந்து-கம்போடியா போர்நிறுத்தம்:
# சமாதானத்தின் தலைவராக இருப்பதில் பெருமைப்படுகிறேன்: அதிபர் ட்ரம்ப்

**வாஷிங்டன், ஜூலை 30-**

சமாதானத்தின் தலைவராக இருப்பதில் பெருமைப் படுகிறேன் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.



தாய்லாந்து-கம்போடியா இடையே நிலவும் நீண்ட கால எல்லை பிரச்சினை தற்போது மோதலாக வெடித்தது. இதனால் இரு நாடுகளின் வீரர்களும் எல்லையில் தாக்குதல் நடத்தினர். இந்த மோதலில் இதுவரை இரு தரப்பிலும் 33 பேர் பலியாகி உள்ளனர். போர் நிறுத்தம் தொடர்பாக மலேசியாவின் புட்ரஜயா நகரில் பிரதமர் அன்வர் இப்ராகிம் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்நிலையில் கம்போடியா-தாய்லாந்து போர் நிறுத்தத்திற்கான தனது ஈடுபாடு குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் பெருமிதம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது ட்ரூத் சோசியலில் பதிவிட்டுள்ள அவர், "தாய்லாந்தின் தற்காலிக பிரதமர் மற்றும் கம்போடியாவின் பிரதமரிடம் இப்போதுதான் பேசினேன். ஜனாதிபதி டொனால்டு டிரம்பின் ஈடுபாட்டிற்குப் பிறகு, இரு நாடுகளும் ஒரு போர் நிறுத்தம் மற்றும் அமைதியை எட்டியுள்ளன என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இந்த போரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் மூலம், ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றி உள்ளோம். வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குமாறு எனது வர்த்தகக் குழுவிற்கு நான் அறிவுறுத்தி உள்ளேன். இப்போது ஆறு மாதங்களில் பல போர்களை முடித்துவிட்டேன்- அமெரிக்காவின் தலைவராக இருப்பதில் பெருமைப் படுகிறேன்" என்று அதில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# கனடா: விமான விபத்தில் இந்தியர் பலி

**ஒட்டவா, ஜூலை 30-**

கனடா நாட்டில் சிறிய ரக விமான விபத்தில், இந்திய இளைஞர் ஒருவர் பலியானது உறுதியாகியுள்ளதாக, அந்நாட்டிலுள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

நியூ ஃபவுண்ட்லேண்ட் மாகாணத்தின், டீர் லேக் பகுதியில் கடந்த ஜூலை 26 ஆம் தேதியன்று, பிரிட்டனைச் சேர்ந்த கிளிக் ஏரியல் சர்வே நிறுவனத்துக்குச் சொந்தமான சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது. இதில், விமானத்தில் பயணித்த 2 பேரும் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, இந்த விபத்தில் பலியானவர்களின் பெயரை வெளியிட அந்நிறுவனம் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டு, அரசு அதிகாரிகளின் விசாரணைக்குப் பின் பலியானவர்களின் விவரங்கள் வெளியாகும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த விபத்தில் பலியான 2 பேரில் ஒருவர், கௌதம் சந்தோஷ் எனும் இந்தியர் என்பது உறுதியாகியுள்ளதாக, டொரான்டோவிலுள்ள இந்தியத் தூதரகம் நேற்று அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது. இந்த விபத்தில், பலியான 27 வயதான கௌதம் சந்தோஷ், கேரளத்தைச் சேர்ந்தவர் என்றும், கிளிக் ஏரியல் சர்வேவின் டெல்டா நிறுவனத்தில் அவர் டெக்னிகல் எக்ஸ்பெர்ட்டாக, பணியாற்றி வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இதேபோல், ஜூலை 8 ஆம் தேதியன்று, கனடாவின் மனிடோபா மாகாணத்தில் ஏற்பட்ட சிறிய ரக விபத்தில், ஸ்ரீஹரி சுகேஷ் எனும் இந்தியர் உள்பட 2 மாணவ விமானிகள் பலியாகினர். இதில், பலியான ஸ்ரீஹரி சுகேஷூம் கேரளத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டாக்டர் எழுதும் மருந்துச்சீட்டை படிக்கும் 'குரோக்' ஏ.ஐ.: மஸ்க்

**வாஷிங்டன், ஜூலை 30-**

டாக்டர் எழுதும் மருத்துவ சீட்டை எலான் மஸ்க் படிப்பது போன்று குரோக் ஏ.ஐ.

செயற்கை நுண்ணறிவு எனப்படும் ஏஐ தொழில்நுட்பம் உலக அளவில் வேகமாக வளர்ந்து வருகிறது. கிட்டத்தட்ட அனைத்துத் துறைகளிலும் ஏஐ ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது. ஐடி, சினிமா, மருத்துவம் எனப் பல முன்னணித் துறைகளிலும் ஏஐ பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கியிருப்பது, பலரையும் வேலை இழப்புக்கு உள்ளாக்கும் என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சினிமாவை எடுத்துக் கொண்டால், யாரும் நடிக்காமல் ஒரு திரைப்படத்தையே எடுத்து முடிக்கும் அளவுக்கு ஏஐ ஆதிக்கம் செலுத்துகிறது. ஓபன் ஏஐ நிறுவனத்தின் சாட்ஜிபிடி, எக்ஸ் தளத்தின் குரோக், கூகுளின் ஜெமினி போன்றவை மக்களிடையே அதிகம் பயன்படுத்தப்படும் ஏஐகளாக உள்ளன. இந்த ஏஐ மூலம் தேடப்படும் தகவல்கள் சில வினாடிகளில் மொத்தமாகக் கிடைத்து விடுவது பயனர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஏஐ-க்கள் குறித்து பலரும் தங்கள் வலைத்தளங்களில் பதிவிட்டு வருவதை பார்க்க முடிகிறது. அந்த வகையில், குரோக் ஏஐ-யின் சமீபத்திய பதிப்பைப் பயன்படுத்தி வரும் அமெரிக்காவைச் சேர்ந்த டெட்சூ என்ற பயனர், ஒரு மலையேற்றத்தின் போது குரோக் 4 கேமராவில் அங்குள்ள தாவரங்களைக் காட்டி, அவற்றின் பெயரைக் கூறுமாறு கேட்டுள்ளார்.

அதற்கு குரோக் உடனடியாகப் பதிலளித்துவிட்டது. சிலவற்றை யூகங்களின் அடிப்படையில் பதிலளித்துள்ளது. இதைக் கண்டு வியந்து போன அவர், தனது எக்ஸ் தளத்தில் இதைப் பதிவிட்டிருந்தார். இந்த வீடியோவைத் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்திருக்கும் எலான் மஸ்க் கூறியிருப்பதாவது:

"உங்கள் கேமராவை எதை நோக்கி வேண்டுமானாலும் காட்டுங்கள். அது என்ன என்பதை குரோக் சொல்லிவிடும். எனது டாக்டரின் மருந்துச்சீட்டில் உள்ள எழுத்தைக் கூட அது படித்து விடக்கூடும்" என்று பதிவிட்டுள்ளார்.

# அமெரிக்கா: துப்பாக்கி சூட்டில் 5 பேர் பலி

**வாஷிங்டன், ஜூலை 30-**

அமெரிக்காவில் நடந்த துப்பாக்கி சூட்டில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் நியூயார்க் மாகாணம் மேன்ஹாட்டன் நகரில் பார்க் அவன்யூ பகுதியில் 44 மாடிகளை கொண்ட அடுக்குமாடி கட்டிடம் உள்ளது. இந்த கட்டிடத்தில் பல்வேறு முக்கிய நிதி நிறுவனங்களின் அலுவலகங்கள், தேசிய கால்பந்து லீக்கின் அலுவலகம் உள்ளிட்டவை அமைந்துள்ளன.

இந்நிலையில், இந்த கட்டிடத்திற்குள் நேற்று மாலை 6 மணியளவில் (அந்நாட்டு நேரப்படி) துப்பாக்கியுடன் மர்ம நபர் புகுந்தார். அந்த நபர் கட்டிடத்தின் முதல் தளத்தில் இருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினார். இந்த துப்பாக்கி சூட்டில் போலீஸ் அதிகாரி உள்பட 4 பேர் உயிரிழந்தனர். பின்னர், துப்பாக்கி சூடு நடத்திய நபர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார். இதனால், இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் மொத்தம் 5 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தில் பலர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தற்கொலை செய்துகொண்ட நபர் நெவாடா மாகாணத்தை சேர்ந்த ஷேன் தம்ரா என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த துப்பாக்கி சூட்டிற்கான காரணம் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உக்ரைன் சிறைச்சாலை மீது ரஷ்யா வான்வழி தாக்குதல்

**கீவ், ஜூலை 30-**

உக்ரைனில் உள்ள சிறைச்சாலை மீது ரஷ்யா நடத்திய வான்வழி தாக்குதலில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

உக்ரைன், ரஷ்யா இடையேயான போர் நேற்று 1 ஆயிரத்து 252வது நாளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால் அது தோல்வியில் முடிந்தது. அதேபோல், போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்யா, உக்ரைன் நடத்திய நேரடி பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்தது. இதனால், போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா நேற்று அதிரடி தாக்குதல் நடத்தியது. உக்ரைனின் சபோரிஜியா மாகாணம் பிலன்கிஸ்கா நகரில் உள்ள சிறைச்சாலை மீது ரஷ்யா வான்வழி தாக்குதல் நடத்தியது. டிரோன்கள் மூலம் சிறைச்சாலை மீது குண்டுகள் வீசப்பட்டன. இந்த தாக்குதலில் சிறைக்கைதிகள் உள்பட 17 பேர் உயிரிழந்தனர். மேலும், 80 பேர் படுகாயமடைந்தனர்.

### 6.5 ரிக்டர் அளவில்
# நிக்கோபர் தீவுகளில் நிலநடுக்கம்

**புதுடெல்லி, ஜூலை 30-**

நிக்கோபர் தீவுகளில் 6.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியாவின் நிக்கோபர் தீவுகள் பகுதியில் நேற்று அதிகாலை 6.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் இல்லை என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் மற்றும் சுனாமி எச்சரிக்கை அமைப்பு தெரிவித்துள்ளது. மேற்கு இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்தில், சபாங்கிலிருந்து மேற்கு-வடமேற்கே 259 கிலோமீட்டர் தொலைவில், நேற்று நள்ளிரவு 12: 12 மணியளவில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

6.5 ரிக்டர் என்பது சக்திவாய்ந்த நிலநடுக்கமாக இருந்தாலும், சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்பதை சுனாமி எச்சரிக்கை மையத்தின் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். மேலும், இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை.

# இன்று பூமியை நெருங்கும் விண்கல்: நாசா எச்சரிக்கை

**நியூயார்க், ஜூலை 30-**

பூமியை விண்கள் ஒன்று நெருங்குவதாக நாசா அறிவித்துள்ளது. மணிக்கு 16,904 மைல் வேகத்தில் பயணித்து பூமியை நெருங்கிக் கொண்டிருக்கும் விண்கல் ஒன்று, ஜூலை 30ஆம் தேதி பூமியை மிக நெருக்கத்தில் கடந்து செல்லவிருப்பதாக நாசா எச்சரித்துள்ளது.

2025ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் தேதி இன்று பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் விண்கல் 2025 ஓஎல்1 என பெயரிடப்பட்டுள்ளது. இது கிட்டத்தட்ட ஒரு சிறிய ரக விமானத்தின் அளவில் இருப்பதாகவும், 1.29 மில்லியன் கி.மீ. தொலைவில் இது பூமியை பாதுகாப்பாகக் கடந்து சென்றுவிடும் என கணிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.


இந்த நிகழ்வு பூமிக்கு ஒரு எச்சரிக்கையாகவே அமைந்திருப்பதாகவும், ஆனால் பூமிக்கு ஆபத்தில்லை என்றும் நாசா விளக்கம் கொடுத்துள்ளது. இதுபோன்ற விண்கல்கள், தொடர்ந்து விண்வெளியில், கண்காணிப்புப் பணிகளை அதிகப்படுத்தி, பூமிக்கு ஏதேனும் ஆபத்து நேரிடும் என்றால் அதனை தடுக்கும் உபாயங்களைக் கண்டறிவதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதையே நாசா, இஸ்ரோ போன்ற விண்வெளி ஆய்வு மையங்களுக்கு எச்சரிக்கை தகவலாக அமைந்துள்ளது.

# மேட்டூர் அணை நீர்வரத்து வினாடிக்கு 1,10,500 கன அடி

**மேட்டூர், ஜூலை 30-**

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 1,10,500 கன அடியாக நீடிக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 1,10,500 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மின் நிலையங்கள் வழியாக வினாடிக்கு 18,000 கன அடி நீரும், உபரிநீர் 16 கண் பாலம் வழியாக வினாடிக்கு 92 ஆயிரம் கன அடி நீரும் திறக்கப்படுகிறது. கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 120 அடியாகவும் நீர் இருப்பு 93.47 டிஎம்சியாகவும் உள்ளது.

**30-07-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பெயரும், புகழும் உயர்ந்து பெருமை தரும். வாகன, போஜன சுகங்கள் வளரும் நாள். உனக்கென்னையா ராஜா ! என உறவுகள் உரைக்கும் உன்னத நாள். புத்தாடை, ஆபரணம் புதிதாகச் சேரும் நாள்.

**ரிஷபம்:-** எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் அதிகாரிகளுக்கு திருப்தி இருக்காது. ஆரோக்கியக் குறைவு, பயணத்தில் தடங்கல்கள் ஆகியவை ஏற்படும். வீட்டில் பொருட்கள் காணாமல் போகலாம்.

**மிதுனம்:-** மனதில் கலக்கம் ஏற்படும். வீண் செலவுகள் பயணங்களில் தடங்கல்களும் ஏற்படும். தாய்க்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படும். இந்த நாள் இனிய நாளாக இறைவனை இறைஞ்சுவதைத் தவிர வழியேதும் இல்லை.

**கடகம்:-** எதிர்பார்த்த இனங்களில் இருந்து தடையின்றி தனவரவு அதிகரிக்கும். புத்தி தெளிவு பெற்று ஆதாயம் தரும் புதுப்புது சிந்தனைகள் தோன்றும். சகோதரரால் நன்மைகள் ஏற்படும்.

**சிம்மம்:-** பிள்ளைகளின் படிப்பில் கவனம் செலுத்துங்கள். வம்பு, வழக்கு மற்றும் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டிய நாள். தனநாசம் ஏற்பட்டு அதனால் கவலைகள் அதிகரிக்கும். உடல் சோர்வு ஏற்படும்.

**கன்னி:-** மனத் திருப்தி மற்றும் தனவரவு தரும் மகிழ்வான நாள். வாக்கு வன்மையால் பயன் பெரும் வளமான நாள். நோக்கும் இடமெல்லாம் ஒளி மிக்க வழி தெரியும் முன்னேற்றமான நாள்.

**துலாம்:-** கோபத்தால் வம்பு தும்பு விலைக்கு வாங்கிருப்பது விவேகம் புத்தி தெளிவின்மையால் மதியம் வரை நிம்மதியற்ற நிலை தென்படும். பெண்களின் பேராசை காரணமாக வெட்டி செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** புது தெம்பும், புத்தொளியும் ஏற்படும். ஆராய்ச்சி மனப்பான்மையால் ஆதாயம் உண்டு. பலவகையிலும் தன லாபங்கள் ஏற்படும். பிறருக்கு உதவுவதால் மனம் பேரின்பம் அடையும். .

**தனுசு:-** புதிய உத்தியோகமும், உத்வேகமும் ஏற்படும் நாள். பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு.

**மகரம்:-** மனதில் அமைதியும், தெய்வீகத் திருப்பணிகளில் ஈடுபாடு நிலவும். சுகம், சந்தோஷம் மற்றும் உல்லாசப் பயணங்கள் ஆகியவை ஏற்படும். அரசு ஆதரவும், பெரியோரால் நன்மைகளும் உண்டு.

**கும்பம்:-** நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நினைத்தபடி எதுவும் நடக்காது. வழக்கு விவகாரங்களில் வாழ்க்கையில் புது திருப்பங்கள் ஏற்படும். மனைவியின் கலகத்தால் உறவுக்குள் பகை ஏற்படும்.

**மீனம்:-** காதல் உறவு கனிந்து களிப்புறும் நாள். மனைவி மூலம் நன்மையும், மகிழ்வும் பெருகும். தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். தொழில் அபிவிருத்திக்கான திட்டங்கள் ஈடேறும்.

### மகன் கொலைக்கு நீதிதான் வேண்டும்:
# நிவாரண நிதியை பெற்றுக்கொள்ள இளைஞர் கவின் பெற்றோர் மறுப்பு

**நெல்லை, ஜூலை 30-**

கவின் குடும்பத்திற்கு தமிழக அரசின் சார்பில் ரூ.6 லட்சம் நிவாரணம் வழங்குவதற்கான காசோலையை அவரது பெற்றோர் வாங்க மறுத்து விட்டனர்.

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் தெற்கு மாடவீதியை சேர்ந்தவர் சந்திரசேகர். இவரது மனைவி தமிழ்செல்வி. இவர்களது மகன் கவின் செல்வகணேஷ்(வயது 27). இவர் சென்னையில் ஐ.டி. நிறுவனத்தில் என்ஜினீயராக வேலை பார்த்து வந்தார். இந்நிலையில், காதல் பிரச்சனையில், கவின் 3 நாட்களுக்கு முன் பாளை கே.டி.சி. நகர் பகுதியில் வைத்து சுர்ஜித் என்பவரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இதுதொடர்பாக பாளையங்கோட்டை இன்ஸ்பெக்டர் காசி பாண்டியன் வழக்குப்பதிவு செய்து சுர்ஜித் என்பவரை கைது செய்தார். இந்த கொலை சம்பவத்தில் அவரது தாய்-தந்தையரான போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களாக பணிபுரியும் சரவணன் மற்றும் கிருஷ்ணகுமாரி மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் கவின் குடும்பத்திற்கு தமிழக அரசின் சார்பில் ரூ.6 லட்சம் நிவாரணம் வழங்குவதற்கான காசோலையை அவரது பெற்றோரிடம் வழங்குவதற்காக பாளையங்கோட்டை போலீஸ் உதவி கமிஷனர் சுரேஷ் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் சென்றனர். ஆனால் எங்களுக்கு நிவாரணம் வேண்டாம், நீதி வேண்டும். கொலைக்கு முக்கிய காரணமான சுர்ஜித்தின் பெற்றோரை 24 மணி நேரத்தில் கைது செய்வோம் என நேற்று அதிகாரிகள் எங்களிடம் வாக்குறுதி கொடுத்தனர். ஆனால் 15 மணி நேரத்திற்கு மேலாகியும் இதுவரை அவர்கள் கைது செய்யப்படவில்லை. இன்று மதியத்திற்குள் அவர்களை கைது செய்யாவிட்டால் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்வோம் என கூறி நிவாரண தொகையை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஜார்க்கண்ட்: விபத்தில் 18 பேர் பலி

**ராஞ்சி, ஜூலை 30-**

ஜார்க்கண்டில் பேருந்து விபத்தில் 18 பக்தர்கள் உயிரிழந்தனர்.

ஜார்க்கண்ட் மாநிலம் தியோகரில் உள்ள மோகன்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஜமுனியா வனப்பகுதிக்கு அருகே நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கன்வாரியா பக்தர்களை ஏற்றிச் சென்ற பேருந்து எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லாரி மீது மோதிய விபத்தில் 18 பக்தர்கள் உயிரிழந்தனர். விபத்தில் 20க்கும் மேற்பட்ட பக்தர்கள் படுகாயம் அடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினரும், மீட்புக்குழுவினரும் பாதிக்கப்பட்டவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பாபா பைத்யநாத் தாம் கோவிலில் புனித நீரை வழங்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் பயணிக்கும் ஷ்ரவாணி மேளாவின் போது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. விபத்தில் கன்வாரியா பக்தர்கள் பலியானதை அந்தத் தொகுதியின் பாஜக எம்.பி. நிஷிகாந்த் உறுதிபடுத்தியுள்ளார். மேலும், இதுகுறித்து அவர் தன்னுடைய எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்தப் பதிவில், எனது மக்களவைத் தொகுதியான தியோகரில் கன்வாரியா பக்தர்கள் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் பரிதாபமாக பலியாகியுள்ளனர்.

பாபா பைத்யநாத் ஜி இந்தத் துயரத்தைத் தாங்கும் வலிமையை பலியானோரின் குடும்பத்தினருக்கு வழங்கட்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நேரு, இந்திரா மீது பழிபோடுவது பா.ஜ.க.வின் வாடிக்கை: ஆ.ராசா

**புதுடில்லி, ஜூலை 30-**

நேரு, இந்திரா மீது பழி போடுவது பா.ஜ.க.வின் வாடிக்கை என மக்களவையில் தி.மு.க. எம்.பி. ஆ. இராசா பேசியுள்ளார்.

மக்களவையில் ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான விவாதத்தில் தி.மு.க. எம்.பி. ஆ. இராசா பேசுகையில், "தி.மு.க.வை தேச விரோதி போல சித்தரிக்க முயற்சி நடக்கிறது.

பா.ஜ.க.வினர் எப்போது பார்த்தாலும் நேரு, இந்திரா காந்தி மீதுதான் தவறு என பழி போடுகின்றனர். அவர்கள் மீது பழிபோடுவதுதான் பா.ஜ.க.வினருக்கு வாடிக்கை. கடந்த கால ஆட்சிகளை ஒப்பிட்டு மட்டுமே பேசுகின்றனர். நேருவைப் போல ஒரு பிரதமர் யாரும் இல்லை. நாட்டின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது.

பஹல்காம் தாக்குதலுக்கு காரணமானவர்கள் சுட்டுக்கொல்லப் பட்டார்கள் என்று கூறிவிட்டால் சரியாகிவிடுமா? பாதிக்கப்பட்டவர்களின் நிலை என்ன? விதி 370 பிரிவைக் கொண்டு வந்த பிறகு காஷ்மீரில் சண்டை இருக்காது.

துப்பாக்கிச் சத்தம் இருக்காது என்றெல்லாம் கூறினார்கள். பஹல்காம் தாக்குதலுக்கு உளவுத்துறை தோல்வியே காரணம். தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த நாடுகள் ஒன்றுகூட பாகிஸ்தானுக்கு எதிராக பேசவில்லை.

போரை நிறுத்தியதாக டிரம்ப் கூறுகிறார், ஆனால் மத்திய அரசு அதை மறுக்கிறது. இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் கூறியது வெட்கக்கேடு. ஒரு இந்திய குடிமகனாக வெட்கப்படுகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### சீனாவில் மக்கள் தொகை சரிவை சரிசெய்ய
# ஒவ்வொரு குழந்தைக்கும் ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்க முடிவு

**பெய்ஜிங், ஜூலை 30-**

சீனாவில் மக்கள் தொகையை சரிவை சரிசெய்ய ஆண்டுக்கு ரூ.50 ஆயிரம் நிதி உதவி வழங்க அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

உலகில் அதிகப்படியான மக்கள் தொகை கொண்ட நாடாக இருந்த சீனா, மக்கள் தொகையை குறைக்க பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது. இதனால் தற்போது மக்கள் தொகை எண்ணிக்கையில் இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. 140 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையுடன் முதலிடத்தில் இந்தியா உள்ளது.

தற்போது, தான் எதிர்பார்த்ததை விட மக்கள் தொகை வேகமாக சரிந்ததால் சீனா கவலை அடைந்துள்ளது. குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்விக்கான அதிகச் செலவு, வேலையின்மை தான், சீனா இளைஞர்கள் குழந்தைகள் பெற்றுக் கொள்வதை தவிர்ப்பதற்கான காரணம் என மக்கள் தொகை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மக்கள் தொகை சரிவதால் கவலை அடைந்துள்ள சீனா அதை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அதன்படி, தம்பதிகள் குழந்தை பெற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் விதமாக, புதிய திட்டம் ஒன்றை சீனா அறிவித்துள்ளது. இதன்படி, நடப்பு ஆண்டு ஜனவரி 1-ந் தேதியில் இருந்து பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் ஆண்டுதோறும் 3,600 யுவான் (இந்திய மதிப்பில் சுமார் 50 ஆயிரம்) மானியம் வழங்கப்படும் என சீன அரசு அறிவித்துள்ளது. இந்த நிதி குழந்தையின் 3 வயது வரை வழங்கப்படும். அதாவது ஒரு குழந்தைக்கு ரூ.1.30 லட்சம் மானியம் வழங்கப்பட உள்ளது.

# இந்தியா - பாகிஸ்தான் சண்டையை நிறுத்தியதாக மீண்டும் கூறும் டிரம்ப்

**லண்டன், ஜூலை 30-**

நான் தலையிடவில்லை என்றால் இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டையிட்டு கொண்டுதான் இருக்கும் என்று டிரம்ப் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், ஸ்காட்லாந்தில் உள்ள தனது இல்லத்துக்கு சென்றார். அங்கு அவரை இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், தன்னுடைய மனைவி விக்டோரியாவுடன் சென்று சந்தித்தார். அப்போது, இஸ்ரேல் தாக்குதல் நீடித்து வருவதால், காசாவில் நிலவும் உணவு தட்டுப்பாட்டை போக்க அமெரிக்கா முக்கிய பங்காற்ற வேண்டும் என்று கெய்ர் ஸ்டார்மர் கேட்டுக்கொண்டார்.

இருவரும் சேர்ந்து நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது, இந்தியா-பாகிஸ்தான் சண்டை உள்பட 6 பெரிய போர்களை, தான் நிறுத்தி இருப்பதாக டிரம்ப் கூறினார். தான் தலையிடாவிட்டால், இந்தியாவும், பாகிஸ்தானும் சண்டையிட்டு கொண்டுதான் இருக்கும் என அவர் கூறினார்.

**மரம் மனிதனின் உரம்**

# சர்வதேச புலிகள் தினம்: முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, ஜூலை 30-

புலிகளைப் பாதுகாப்பு தன் வழியே, நம் காடுகளின் ஆன்மாவை நாம் பாதுகாக்கிறோம். என முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

ஜூலை 29-ந் தேதி, சர்வதேச புலிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

இந்நிலையில், உலகப் புலிகள் நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியதாவது:-

உலகப் புலிகள் நாளில் தமிழ்நாடு பெருமிதத்துடன் முழங்குகிறது! தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத் தரவுகளின்படி, 306 புலிகளைக் கொண்டுள்ளது தமிழ்நாடு. இந்த வெற்றிக்குக் காரணம், கடினமான பகுதிகளில், முக்கியத்துவம் மிகுந்த புலிகளின் வாழிடங்களைப் பாதுகாக்கும் நமது வனத்துறைப் பணியாளர்களும், வேட்டைத் தடுப்பு அணியினரும்தான்.

வனங்களைப் பாதுகாக்கும் பணியினை மேம்படுத்திட, 1,947 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன, வனத்துறையினருக்கு நவீன உடைகள், தொழில்நுட்பக் கருவிகள் வழங்கப்படுகின்றன, கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அயல் - ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றி, புலிகளின் வாழிடங்கள் மீளுருவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

காடுகளின் வளம் மேம்படுத்தப்படுகிறது. கானுயிர் மீதான குற்றங்கள் புரியும் கும்பல்களை அடக்க, தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு எனும் சிறப்புப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. புலிகளைப் பாதுகாப்பதன் வழியே, நம் காடுகளின் ஆன்மாவை நாம் பாதுகாக்கிறோம். என பதிவிட்டுள்ளார்.

# இனி கிராம பகுதிகளில் தொழில் செய்ய லைசென்ஸ் கட்டாயம்

## தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஜூலை 30-

கிராம பஞ்சாயத்து பகுதிகளில் தொழில் செய்பவர்கள் இனி அதற்கு கட்டாயம் லைசென்ஸ் பெற வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக அரசு, தமிழ்நாடு கிராம பஞ்சாயத்து வணிகம் அல்லது தொழில் உரிமம் (லைசென்ஸ்) வழங்குவதற்கான விதிகள்-2025 என்ற சட்டத்தை கடந்த சட்டசபை கூட்டத்தொடரில் கொண்டு வந்து நிறைவேற்றியது.

அதற்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்ததால், அரசாணை வெளியிடப்பட்டு தற்போது சட்டமாக அமலுக்கு வந்துள்ளது.

இந்த சட்டத்தின்படி கிராம பஞ்சாயத்து பகுதிகளில் வணிகம் அல்லது தொழில் செய்பவர்கள் இனி அதற்குரிய கட்டணம் செலுத்தி கட்டாயம் உரிமம் (லைசென்ஸ்) பெற வேண்டும். இது டீக்கடை முதல் அனைவருக்கும் பொருந்தும் என்றும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதில் பழைய பேப்பர்கள்-இரும்பு பொருட்கள் விற்பனை, கொரியர் சேவைகள், அச்சகம், இறைச்சி-மீன் கடைகள், தையல் தொழில், சலவை கடைகள், திருமண மண்டபங்கள் உள்ளிட்ட 119 சேவை தொழில்களும் பட்டியிலப்பட்டு உள்ளன.

இந்த தொழில்களுக்கு கிராம பஞ்சாயத்துக்கு ஏற்ற வகையில் குறைந்தபட்சம் ரூ.500 முதல் ரூ.30 ஆயிரம் வரை லைசென்ஸ் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## வரும் 1-ம் தேதி முதல்

# டிஜிட்டல் பரிவர்த்தனையில் முக்கிய மாற்றங்கள் அமல்

மும்பை, ஜூலை 30-

டிஜிட்டல் பரிவர்த்தனையில் வரும் ஆகஸ்ட் 1 முதல் சில முக்கிய மாற்றங்கள் அமலுக்கு வர உள்ளன.

ஸ்மார்ட்போன்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்ட இந்தக் காலத்தில், மக்களிடையே யு.பி.ஐ. எனப்படும் டிஜிட்டல் பரிவர்த்தனையும் அதிகரித்துள்ளது. இந்த யு.பி.ஐ. சேவைகளை கூகுள் பே, போன் பே போன்ற நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. யு.பி.ஐ. சேவைகளை மேம்படுத்தும் வகையில் அவ்வப்போது புதிய விதிகளை தேசிய பணப் பரிவர்த்தனைக் கழகம் மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், வரும் ஆகஸ்ட் 1 முதல் சில முக்கிய மாற்றங்கள் அமலுக்கு வர உள்ளன. இதன் விவரம் வருமாறு: யு.பி.ஐ. செயலிகள் மூலம் வங்கிக் கணக்கு இருப்பை (பேலன்ஸ்) ஒரு நாளைக்கு 50 முறை மட்டுமே சரிபார்க்க முடியும். இதேபோல், மொபைல் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகள் பற்றிய தகவல்களை ஒரு நாளைக்கு 25 முறை மட்டுமே அணுக முடியும். இந்த வசதியை அடிக்கடி தேவையின்றி பயன்படுத்துவதைத் தடுக்கவே இந்த வரம்பு கொண்டுவரப்படுகிறது. தானாகவே பணத்தைக் கழிக்கும் ஆட்டோ டெபிட் குறைந்த நேரங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்படும். அதாவது, பீக் நேரங்கள் எனப்படும் பயன்பாடு பரிவர்த்தனைகள் அதிகம் நடக்கும் நேரத்தில் ஆட்டோ டெபிட் செய்ய அனுமதி இல்லை. இதன்படி, காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரையும் மாலை 5 மணி முதல் இரவு 9:30 வரையும் ஆட்டோ டெபிட் செய்ய அனுமதி இல்லை. யு.பி.ஐ. பயன்பாடு அதிகரித்துவிட்டதால், அதன் நெட்வொர்க்கில் அதிக அழுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் இந்த விதிகள் கொண்டுவரப்படுகின்றன.

# ‘பிரளய்’ ஏவுகணை சோதனை வெற்றி

புதுடில்லி, ஜூலை 30-

பிரளய் ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தி, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர்.டி.ஓ.) சாதனை படைத்துள்ளது.

ஒடிசா கடற்கரையில் உள்ள அப்துல் கலாம் தீவில் இருந்து, பிரளய் ஏவுகணையின் இரண்டு தொடர்ச்சியான விமான சோதனைகளை வெற்றிகரமாக நடத்தி, டி.ஆர்.டி.ஓ. சாதனை படைத்துள்ளது.

பிரளய் ஏவுகணை என்பது போர்க்கள பயன்பாட்டிற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணை ஆகும். இது, இந்திய ராணுவம் மற்றும் விமானப்படையின் செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை பல மேம்பட்ட அம்சங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

150 முதல் 500 கிமீ வரை சென்று துல்லியமாக தாக்கும் திறன் கொண்டது. இந்த ஏவுகணை 350 முதல் 700 கிலோகிராம் எடை கொண்டது. எதிரி இலக்குகளை வீரியமாக தாக்கும் சக்தி உடையது. இந்த ஏவுகணை சோதனை வெற்றி அடைந்தது பாதுகாப்பு துறைக்கு மிக முக்கிய மைல்கல் என கருதப்படுகிறது.

## பிரதமர் நரேந்திரமோடி தலையீட்டால்

# சிபில் ஸ்கோர் நடைமுறை நிறுத்தி வைப்பு: இ.பி.எஸ்



திருச்சி, ஜூலை 30-

மோடி தலையீட்டால் சிபில் ஸ்கோர் நடைமுறை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாக எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- என்.டி.ஏ கூட்டணியில் அ.தி.மு.க. - பா.ஜ.க. இருக்கிறது.

இந்த கூட்டணியில் மேலும் பல கட்சிகள் உள்ளன. வன்னியர்களுக்கான 10.5 சதவீதம் ஒதுக்கீடு என்பது முடிந்துபோன விஷயம். சிபில் ஸ்கோர் கேட்பதால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். சிபில் ஸ்கோர் நடைமுறையால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக பிரதமரிடம் மனு அளித்தேன். பிரதமர் மோடியிடம் மனு அளித்ததும் பயிர்கடனுக்காக விவசாயிகளின் சிபில் ஸ்கோர் நடைமுறை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பயிர்க்கடன் வழங்குவதில் பழைய நடைமுறையையே கடைபிடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தி.மு.க. மத்தியில் ஆட்சியில் இருந்தபோது கல்வியை பொதுபட்டியலுக்கு கொண்டு வராதது ஏன்? இவ்வாறு அவர் கூறினார்.

## மக்களை காப்பதில் பா.ஜ.க அரசு தோல்வி:

# தமிழன் ஒருநாள் கங்கையை வெல்வான்: கனிமொழி எம்.பி.



புதுடெல்லி, ஜூலை 30-

சோழன் கங்கையை வென்றான், தமிழன் ஒருநாள் கங்கையை வெல்வான் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்று திமுக எம்.பி., கனிமொழி கூறினார்.

நாடாளுமன்றத்தில் ஆபரேஷன் சிந்தூர் விவாதத்தில் கனிமொழி எம்.பி. உரையாற்றியதாவது:- எங்கள் மீது நம்பிக்கை வைத்து குழு தலைவர்களாக வெளிநாடு செல்ல வாய்ப்பளித்ததற்கு நன்றி. தேச பக்தியில் தமிழர்கள் ஒரு போதும் குறைந்தவர்கள் அல்ல, தேசத்தை எந்த வகையிலும் தமிழ்நாடு விட்டுக் கொடுத்ததில்லை. இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம், எங்களை பிரிக்காதீர்கள். விஸ்வகுரு என்று கூறிக் கொள்ளும் பிரதமர் மோடி, பஹல்காம் தாக்குதலுக்கு பிரதமர் மோடி பொறுப்பேற்றுள்ளாரா? பயங்கரவாதத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு மத்திய அரசு என்ன உதவி செய்கிறது?

பஹல்காம் தாக்குதலை எப்படி தடுக்க தவறினீர்கள்? தாக்குதலுக்கு முன் புலனாய்வு அமைப்புகள் என்ன செய்து கொண்டிருந்தன. பயங்கரவாத தாக்குதலை நீங்கள் தடுத்திருக்க வேண்டாமா? முந்தைய தாக்குதலில் இருந்து நீங்கள் பாடம் கற்றுக்கொண்டிருக்க வேண்டாமா? பயங்கரவாதத்தால் இறப்பவர்கள் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. அவர்கள் வம்சமே பாதிக்கப்படுகிறது. மக்களை பாதுகாப்பதில் பா.ஜ.க அரசு தோல்வி அடைந்துவிட்டது.

ஒவ்வொருதேர்தலின்போதும் தமிழர்களின் பெருமை, கலாசாரத்தை கண்டறிந்துவிடுகிறது பா.ஜ.க. ஆனால் கீழடி நாகரிகத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. திடீரென பிரதமருக்கு சோழர்கள் மீது பாசம் ஏற்பட்டுள்ளது. சோழன் கங்கையை வென்றான், தமிழன் ஒருநாள் கங்கையை வெல்வான் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# எல்லை தாண்டி மீன் பிடித்ததாக 14 ராமேசுவரம் மீனவர்கள் கைது



ராமேசுவரம், ஜூலை 30-

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ராமேசுவரம் மீனவர்கள் 14 பேரை இலங்கை கடற்படைநேற்று கைது செய்தது.

தமிழகத்தை சேர்ந்த மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் சிறைப்பிடிக்கும் சம்பவம் தொடர்ந்து நடந்து வருகிறது. அதோடு மட்டுமின்றி மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம் பாம்பன் பகுதியை சேர்ந்த 14 மீனவர்கள், மீன்பிடி துறைமுகத்தில் இருந்து விசைப்படகுகளில் வழக்கம்போல் நேற்று அதிகாலை மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.

மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி மீனவர்கள் 14 பேரை கைது செய்தனர்.

அதோடு மீனவர்களின் விசைப்படகினையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட 14 மீனவர்களையும் புத்தளம் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்றனர்.

முன்னதாக, ராமேசுவரத்தை சேர்ந்த 5 மீனவர்களை நேற்று நள்ளிரவு இலங்கை கடற்படையினர் ஏற்கனவே கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர்களின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வருகிற 1-ம் தேதி முதல் கியாஸ் லாரிகள் வேலை நிறுத்தம்

சேலம், ஜூலை 30-

தமிழ்நாடு முழுவதும் சிலிண்டர் லாரிகள் வருகிற 1-ந் தேதி முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர்

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் கியாஸ் சிலிண்டர்கள் நிரப்பும் பிளாண்டுகள் தமிழ்நாடு, புதுச்சேரி உட்பட 12 இடங்களில் உள்ளது. இங்கு லோடு ஏற்றி செல்லும் லாரிகளுக்கு ஒப்பந்தப்படி லோடு கொடுப்பதில்லை. மேலும் போக்குவரத்து ஒழுங்கு முறையில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொண்டுள்ளதால் அபராதம் விதிக்கப்படுகிறது. எனவே தமிழ்நாடு முழுவதும் இந்தியன் ஆயில் நிறுவன பிளாண்டுகளில் இருந்து இயங்கும் சிலிண்டர் லாரிகள் வருகிற 1-ந் தேதி முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பாக தமிழ்நாடு எல்.பி.ஜி. கியாஸ் சிலிண்டர் லாரிகள் உரிமையாளர் சங்கத் தலைவர் செந்தில் செல்வன் கூறும்போது:- இது சம்பந்தமாக பெருந்துறையில் இந்தியன் ஆயில் நிறுவன அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த பேச்சுவார்த்தையில் உடன்படிக்கை ஏற்படாதால் இந்த வேலைநிறுத்த போராட்டம் நடக்கிறது என்றார்.

## நெல்லையில் ஐ.டி. ஊழியர் படுகொலை:

# போலீஸ் எஸ்.ஐ. தம்பதி சஸ்பெண்ட்

திருநெல்வேலி, ஜூலை 30-

நெல்லையில் ஐ.டி.ஊழியர் கவின்குமார் கொலை வழக்கில் எஸ்.ஐ. தம்பதியை சஸ்பெண்ட் செய்து தமிழ்நாடு சிறப்பு காவல்படை டி.ஐ.ஜி. விஜயலட்சுமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகமங்கலத்தை சேர்ந்தவர் கவின்குமார் (வயது 26). இவர் சென்னையில் உள்ள பிரபல ஐ.டி.நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். இதனிடையே, சொந்த ஊருக்கு சென்ற கவின்குமார் 3 நாட்களுக்கு முன் நெல்லை பாளையங்கோட்டையில் படுகொலை செய்யப்பட்டார். காதல் விவகாரத்தில் காதலியின் சகோதரன் சுர்ஜித் என்பவர் கவின்குமாரை வெட்டிக் கொன்றார். இந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் கவின்குமாரை கொலை செய்த சுர்ஜித் போலீசில் சரண் அடைந்தார்.

இந்த கொலை சம்பவம் பூதாகாரமான நிலையில் கவின்குமாரின் உடலை வாங்க மறுத்து ஆறுமுகமங்கலம் கிராம மக்கள் சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேவேளை, இந்த கொலை தொடர்பாக பெண்ணின் பெற்றோரான எஸ்.ஐ.க்கள் சரவணன், கிருஷ்ணகுமாரி மீது போலீசார் வன்கொடுமை தடுப்புச்சட்டம் உள்பட 6 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர். இந்நிலையில், நெல்லையில் ஐ.டி.ஊழியர் கவின்குமார் கொலை வழக்கில் எஸ்.ஐ. தம்பதியான சரவணன், கிருஷ்ணகுமாரியை பணியில் இருந்து சஸ்பெண்ட் செய்து தமிழ்நாடு சிறப்பு காவல்படை டி.ஐ.ஜி. விஜயலட்சுமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

## சிறுமி வன்கொடுமை வழக்கு:

# ராஜூவுக்கு 4 நாட்கள் போலீஸ் காவல்



ஆரம்பாக்கம் போலீசார் திருவள்ளூர் போக்சோ நீதிமன்றத்தில் மனு அளித்தனர். அதைத்தொடர்ந்து நேற்று ராஜூவை புழல் சிறையில் இருந்து அழைத்து வரப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அப்போது ராஜூ பிஸ்வகர்மாவை 4 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க போலீசாருக்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது. இதையடுத்து, போலீசார் நீதிமன்றத்தில் இருந்து வெளியே அழைத்து வந்தபோது ராஜூ பிஸ்வகர்மாவை அங்கிருந்த வழக்கறிஞர்கள் சரமாரியாக தாக்க முற்பட்டனர். இதனால் அப்பகுதி சிறிது நேரம் பரபரப்புடன் காணப்பட்டது.

திருவள்ளூர், ஜூலை 30-

திருவள்ளூர் சிறுமி வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ராஜூ பிஸ்வகர்மாவை 4 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க போலீசாருக்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

கும்மிடிப்பூண்டியை அடுத்த ஆரம்பாக்கம் பகுதியை சேர்ந்த 8 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வாலிபரை 15 தனிப்படை போலீசார் தேடி வந்த நிலையில், 14 நாட்களுக்கு பின் சூலூர்பேட்டை ரெயில் நிலையத்தில் கைது செய்தனர். பின்னர் நடந்த விசாரணையில் சிறுமியிடம் அத்துமீறிய வாலிபர் அசாம் மாநிலத்தை சேர்ந்த ராஜூ பிஸ்வகர்மா என்பது தெரியவந்தது. விசாரணை நடத்தி முடித்த நிலையில் அவனை போலீசார் கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். திருவள்ளூர் மவட்ட மகிளா நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட அவனை 15 நாள் நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டர். இதையடுத்து அவர் சிறையில் அடைக்கப் பட்டான். இந்த நிலையில், சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராஜூ பிஸ்வகர்மாவை 7 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க

# நிமிஷா மரண தண்டனை ரத்தா..? மத்திய வெளியுறவு துறை மறுப்பு

புதுடெல்லி, ஜூலை 30-

ஏமன் நாட்டில் கேரள மாநில செவிலியர் நிமிஷா பிரியாவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளதாக வெளியான தகவலை இந்திய வெளியுறவு அமைச்சக வட்டாரம் மறுத்துள்ளது.

இது குறித்து வெளியுறவு அமைச்சக வட்டாரம், “நிமிஷா பிரியா வழக்கில் சில தனி நபர்கள் பகிரும் தகவல் துல்லியமானது அல்ல.” என்று தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை உறுதி செய்வது போல், நிமிஷாவின் மரண தண்டனை ரத்து செய்யப்பட்டதாக வெளியான செய்தியினை தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்திருந்த மதத் தலைவர் அபுபக்கர் முஸ்லியார், அந்தப் பதிவை நீக்கியுள்ளார். கேரளாவின் பாலக்காட்டை சேர்ந்தவர் நிமிஷா பிரியா (38). இவர் கடந்த 2008-ம் ஆண்டு ஏமன் தலைநகர் சனாவில் உள்ள அரசு மருத்துவமனையில் செவிலியராக பணியில் சேர்ந்தார். கடந்த 2015-ல் அரசு செவிலியர் பணியை ராஜினாமா செய்த நிமிஷா, ஏமனைச் சேர்ந்த ஜவுளி வியாபாரி தலால் அய்டோ மெஹ்தியுடன் இணைந்து அங்கு புதிய மருத்துவமனையை தொடங்கினார்.

கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 2017-ம் ஆண்டு மெஹ்திக்கு, நிமிஷா மயக்க ஊசி மருந்தை செலுத்தினார். இதில் அவர் உயிரிழந்தார். இந்த வழக்கை விசாரித்த சனா நகர நீதிமன்றம் கடந்த 2020-ல் நிமிஷாவுக்கு மரண தண்டனை விதித்தது. இதை ஏமன் உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. இதையடுத்து, ஜூலை 16-ம் தேதி நிமிஷாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்று ஏமன் அரசு அறிவித்திருந்தது. சட்டரீதியான முயற்சிகள் தோல்வி அடைந்த நிலையில், மெஹ்தி குடும்பத்தினருக்கு ரூ.8.6 கோடி குருதிப் பணம் அளித்து நிமிஷாவை மீட்க அவரது குடும்பத்தினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு தேவையான உதவிகளை மத்திய அரசு வழங்கி வருகிறது.

# நாடு முழுவதும் இயல்பை விட 7 சதவீதம் அதிக பருவமழை

புதுடெல்லி, ஜூலை 30-

இந்தியாவில் கடந்த ஜூன் 1-ம் தேதி முதல் தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. இந்த பருவமழை இதுவரை இயல்பை விட 7 சதவீதம் அதிகம் பெய்திருப்பதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அந்தவகையில் இயல்பான அளவான 418.9 மி.மீ.யை விட அதிகமாக 447.8 மி.மீ. மழை பதிவாகி இருக்கிறது.

அதேநேரம் இது பல்வேறு பிராந்தியங்களுக்கு இடையே மிகப்பெரிய மாறுபாடுகளை கொண்டுள்ளது. அந்தவகையில் ராஜஸ்தான், லடாக், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் சிக்கிம் மாநிலங்கள் மிக அதிக மழை பெற்றுள்ளன.

ராஜஸ்தான் மாநிலத்தில் 384.7 மி.மீ. (இயல்பான அளவு 200.4 மி.மீ.) மழை பெய்திருக்கிறது.

இதைப்போல லடாக் 30 மி.மீ. மழை (10.7 மி.மீ.) பெற்றிருக்கிறது.

மேலும் மத்திய பிரதேசம், குஜராத், தாத்ரா-நாகர் ஹவேலி, டையூ-டாமன், ஜார்கண்ட் மற்றும் அசாம் போன்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் 20 முதல் 59 சதவீதம் வரை அதிக மழை பெற்றுள்ளன.

உத்தரபிரதேசம், உத்தரகாண்ட், இமாசல பிரதேசம், பஞ்சாப், தமிழ்நாடு, கர்நாடகா, புதுச்சேரி உள்ளிட்ட பெரும்பாலான மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இயல்பான மழை அளவை 19 சதவீத சராசரியில் பெற்றிருக்கின்றன.

அதேநேரம் அருணாசல பிரதேசம், அசாம், பீகார், டெல்லி, மகாராஷ்டிரா, லட்சத்தீவுகள் போன்றவை 20 முதல் 59 சதவீதம் வரை குறைவான மழைப்பொழிவை பெற்று இருக்கின்றன. இந்த தகவல்களை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டு உள்ளது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தென்மாவட்டங்களில் குறிப்பாக திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் ஆதிக்க சாதி வெறிக் கொலைகள், சாதிவெறித் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுவது வேதனையளிக்கிறது. ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கான சட்டத்தை உடனடியாக மாநில அரசு உருவாக்க வேண்டும்.

- திருமாவளவன்




பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு வழிவகுத்த பாதுகாப்பு குறைபாடுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பொறுப்பேற்க வேண்டும். பா.ஜ.க. எம்.பிக்கள், அமைச்சர்கள் நமது பாதுகாப்பு படைகளை அவமதிக்கும் போது பிரதமர் மோடி ஏன் அமைதியாக இருக்கிறார்?

- மல்லிகார்ஜூன கார்கே



சமக்ரா சிக்க்ஷா திட்டத்தின்கீழ் நிதியை விடுவிக்காதது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் ஏழையெளிய மாணவ மாணவியரின் கல்வி மற்றும் ஆசிரியர்களை பாதிக்கும் செயல். கூட்டாட்சித் தத்துவத்திற்கும் எதிரானது. தமிழகத்திற்கான கல்வி நிதியை மத்திய அரசு உடனே விடுவிக்க வேண்டும்

- ஓ.பன்னீர்செல்வம்



2020-க்கு பின்னர் 25 தாக்குதல்கள் நடந்துள்ளன. பொதுமக்கள் மட்டுமின்றி வீரர்களும் உயிரிழந்து உள்ளனர். இதற்கு யார் பொறுப்பு? காங்கிரஸ் ஆட்சியில் பயங்கரவாத தாக்குதல்கள் நடந்தபோது, அப்போது உள்துறை மந்திரியாக இருந்தவர் பதவி விலகினார். இதற்கு பொறுப்பேற்று மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா பதவி விலகுவாரா?

- பிரியங்கா காந்தி



கருணாநிதி 102வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மாநகராட்சி எண்ணூர் அரசு மேல்நிலைபள்ளியில் எண்ணூர் இளைஞர்கள் நடத்திய ஒரு நாள் கிரிக்கெட் போட்டியை மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ தொடங்கி வைத்த போது எடுத்த படம். அருகில் திமுக கவுன்சிலர்கள் தனியரசு சிவகுமார் மற்றும் நிர்வாகிகள் விளையாட்டு வீரர்கள் உள்ளனர்.

# எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசுவது எல்லாமே பொய் தான்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு கடும் தாக்கு



**சென்னை,ஜூலை.30**

எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசுவது எல்மைச்சர்பி.கே.சேகர்பாபு (28.07.2025) சென்னை, கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் கலவலகண்ணன் செட்டி அறக்கட்டளையின் மூலம் நடத்தப்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன் பள்ளி தொடர்ந்து நடத்த இயலாத சூழலில் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அப்பள்ளியில் பயின்று வந்த 500க்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்களின் எதிர்காலம் பாதிக்கப்பட கூடாது என்ற வகையில் துறையின் மூலம் நடத்திட உத்தரவிட்டு 2021 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியாக தொடங்கி வைத்தார்கள். இப்பள்ளிக்கு ரூ.1.78 கோடி செலவில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளப்பட்டு வகுப்புகள் தொடங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் அவர்கள் கடந்த ஜூன் மாதம் 27 அன்று இப்பள்ளிக்கு ரூ. 11.15 கோடி செலவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 32 வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் கொண்ட கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்து இப்பள்ளியில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் 252 மாணவர்களுக்கு கல்விக் கட்டணம், கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தக் பைகளையும், 40 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளையும் வழங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் 123 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுக்கான செலவினத்தை இப்பகுதி திராவிட முன்னேற்ற கழகமே ஏற்றுக் கொண்டது. இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் 25 பள்ளிகளும், 10 கல்லூரிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 22,249 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு கடந்த நான்காண்டுகளில் ரூ.138.13 கோடி செலவில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகம், கலையரங்கம் மற்றும் சுற்றுச்சுவர் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தாண்டு ரூ.14.44 கோடி மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள 1,634 திருக்கோயில்களில் 2.372 திருக்குளங்கள் உள்ளன. முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பெறுப்பேற்றபின், ரூ. 4 கோடி செலவில் 3 புதிய திருக்குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு, ரூ.147.94 கோடி மதிப்பீட்டில் 265 திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழிசை சௌந்தரராஜன் தங்கள் முதுகை அவர்கள் திரும்பிப் பார்த்துக் கொள்வதில்லை. அவர்களின் தகப்பனார் போற்றுதலுக்குரிய குமரி அனந்தன் உடல்நலம் குன்றியிருந்தபோது எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். வானகரத்தில் உள்ள அப்போலோ மருத்துவமனையிலும், பின்னர் சூர்யா மருத்துவமனையில் தான் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது உறவினரான வசந்தகுமார் உடல்நலம் பாதிக்கப்பட்டபோது, தனியார் மருத்துவமனையில் தானே சிகிச்சை பெற்றார். இதையெல்லாம் மறந்துவிட்டு பேசுகிறார். ஏன் அவருடைய கணவர் ராமசந்திரா மருத்துவமனையில் தான் பணியாற்றிக் கொண்டிருந்தார். பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அரசியல் தலைவர்கள் இதுபோன்று தனியார் மருத்துவமனையை தான் நாடுகிறார்கள். அதில் பொதுமக்களுக்கும் மற்றவர்களுக்கும் சிரமங்கள் ஏற்படக் கூடாது என்பதற்காகவும், பாதுகாப்பு கருதியும் இப்படி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆகவே தமிழிசை போன்ற நாகரீக அரசியல்வாதிகள் என்று எங்களுடைய பட்டியலில் வைத்திருந்தவர்களை இதுபோன்ற கேள்விகளில் அந்த நாகரிகத்திற்கு அப்பாற்பட்டவர் என்ற பட்டியலில் திராவிட முன்னேற்ற கழகம் அவரை கருதும். ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் நிலைபாடு மாறி மாறி பேசுவது தான். பார்த்தாலே பெரிய பாக்கியம் என்று இரண்டு நாட்களுக்கு முன்பு கடிதம் எழுதியவர், பார்க்கவில்லை என்ற கோபத்திற்காக தற்போது தான் ஞானோதயம் பிறந்து ஒன்றிய அரசை எதிர்க்க துவங்கி இருக்கிறார். இந்த எதிர்ப்பு நியாயமான முறையில் இருந்தால் நாங்களும் அதை வரவேற்போம்.எடப்பாடி பழனிசாமி அவர்கள் பேசுவது எல்லாமே பொய் தான். அதற்காக தான் உருட்டலும் திரட்டலும் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதற்கு தகுந்த ஒரே தலைவர் தமிழக அரசியல் களத்தில் எடப்பாடி ஒருவர் தான். திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு நடைபெற்ற இடைத்தேர்தல்கள், நாடாளுமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தல் என அனைத்திலும் வெற்றியை சந்தித்தது. இந்த வெற்றிகள் அனைத்துமே தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி, திறம்பட செயல் தன்மை உள்ள ஒரு ஆட்சி என்பதற்கு மக்கள் அளித்த சான்றாகவே நாங்கள் பார்க்கிறோம். தேர்தல் வாக்குறுதிகள் மாத்திரம் அல்லாமல் அவற்றில் இல்லாத பல நல்ல திட்டங்களையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றி இருக்கின்றார். ஆகவே, மக்கள் 2026 ஆம் ஆண்டு மீண்டும் இரண்டாவது முறையாக தமிழக முதல்வரை அரியணையில் அமர்த்துவார்கள். . அன்பு சகோதரர் திருமாவளவன் கொள்கை பிடிப்போடு இருக்கின்ற ஒரு தலைவர். எந்த சூழல் வந்தாலும் அண்ணன் தளபதியை விட்டு அவர் நகர மாட்டார். டிடிவி தினகரன் கடந்த காலத்தில் அவர்தான் முதல்வர் என்று கூறி சுற்றிக் கொண்டிருந்தார். அதிலிருந்து பின்வாங்கியதற்கு வாழ்த்துகள். ராஜேந்திர பாலாஜி அவர்கள் நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கில் மடியிலே கனமில்லை என்றால் வழியிலே பயமில்லை என்று நீதிமன்ற படிக்கட்டுகளில் ஏறி அவர் நிரபராதி என்று நிரூபிக்கட்டும். அவர் ஜாமீன் கோரிய அனைத்து இடங்களிலும் மறுக்கப்பட்டிருக்கின்றது. கடைசியாக அவர் உச்சநீதிமன்றத்திற்கு சென்ற தான் ஜாமீன் பெற வேண்டிய சூழ்நிலை. ஆகவே அவர் மீது சுமத்தப்பட்ட வழக்கில் நியாயமான குற்ற முகாந்திரம் இருப்பதால்தான் நீதிமன்றத்தில் அவருக்கு ஜாமீன் கூட கிடைக்கவில்லை என்றார்.

இந்நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்.த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி. பழனி, சி. ஹரிப்ரியா, சென்னை மாநகராட்சி பணிகள் நிலை குழுத் தலைவர் என். சிற்றரசு, தலைமைப் பொறியாளர். பொ.பெரியசாமி, அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் அ.வி.எம். வேல்முருகன், இணை ஆணையர்கள் இரா. வான்மதி, சி. குமரதுரை, கி.ரேணுகாதேவி, பெ.க.கவெனிதா, துணை ஆணையர் ஆர். ஜெயா, உதவி ஆணையர் ஆர் கார்த்திகேயன், மாநகராட்சி மன்ற உறுப்பினர் கஸ்தூரி, திருக்கோயில் செயல் அலுவலர் முத்துலட்சுமி, பள்ளி முதல்வர் ஜெயந்தி கலந்து கொண்டனர்.

# சென்னை மாநகராட்சியின் சார்பில் நடைபெற்று வரும் சென்னை பள்ளிகளின் கல்வி வளர்ச்சி, மாணவர்களின் சேர்க்கை குறித்த ஆய்வுக் கூட்டம்

## மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடந்தது



**சென்னை,ஜூலை.30**

சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் 35 மேல்நிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 206 தொடக்கப்பள்ளிகள் என மொத்தம் 417 சென்னை பள்ளிகள் மற்றும் அதனுடன் 336 மழலையர் வகுப்புகளில் எல்.கே.ஜி., யூ.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும்

1 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சிறப்பான முறையில் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

இந்த சென்னை பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் கல்வி வளர்ச்சி, மாணவர்களின் சேர்க்கை மற்றும் மேயர் அவர்களின் அறிவிப்பின்படி மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் (29.07.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

**நடவடிக்கை**

இக்கூட்டத்தில், மேயர் சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம், மாணவர்கள் பெற்ற மதிப்பெண் விவரம், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நடவடிக்கைகள், மாணவர்களின் சேர்க்கை விவரம், பள்ளிகளுக்குத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி, கல்வி தொடர்பாக மாநகராட்சி பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில், துணை மேயர்மு.மகேஷ்குமார், ஆணையாளர்.ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) ம.பிரதிவிராஜ், வட்டார துணை ஆணையாளர்கள்எச்.ஆர்.கௌஷிக், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம்த.விசுவநாதன் மற்றும் கல்வி அலுவலர்கள், கலந்து கொண்டனர்.

# போலி ஆவணங்கள் மூலம் அபகரித்து வங்கியில் ரூ.3.03 கோடி பணம் அடமானமாக பெற்று மோசடி: இருவர் கைது

**சென்னை ஜூலை 30;**

சென்னை, மயிலாப்பூரைச் சேர்ந்த தாராசந்த் என்பவர், தனது தாயார் ருக்குமணி என்பவருக்கு சொந்தமாக 1 கிரவுண்ட் மற்றும் 1,262 சதுரடி கொண்ட கட்டிடத்துடன் கூடிய இடம் உள்ளதாகவும், 2019ம் ஆண்டு ருக்குமணி இறந்துவிட்ட நிலையில், சிலர் கூட்டாக சேர்ந்து தனது தாயார் ருக்குமணி போல ஒரு நபரை ஆள்மாறாட்டம் செய்தும், போலி ஆவணங்கள் மூலம் ஜெயராமன் மற்றும் அவரது மனைவி கலைச்செல்வி ஆகியோருக்கு கிரையம் செய்து கொடுத்து, பின்னர் எதிரிகள் மேற்படி சொத்தை தனியார் வங்கியில் அடமானம் வைத்து, ரூ.3.03 கோடி பணத்தை கடனாக பெற்று கடனை செலுத்தாததால், வங்கியிலிருந்து மேற்படி இடத்தில் கடன் நிலுவை நோட்டீஸ் ஒட்டியுள்ளதாகவும், தனது தாயார் பெயரிலுள்ள இடத்தை ஆள்மாறாட்டம் செய்தும், போலி ஆவணங்கள் மூலம் அபகரித்து, வங்கியில் கடன் பெற்று மோசடி செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாராசந்த், 13.02.2024 அன்று சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரின்பேரில், மத்திய குற்றப்பிரிவு, நிலமோசடி புலனாய்வு பிரிவில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

நில மோசடி புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, சுமார் 10 பேரும் கூட்டாக சேர்ந்து மேற்படி மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. அதன்பேரில், காவல் குழுவினர் தீவிர விசாரணை மேற்கொண்டு, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகள் 1.கலைச்செல்வி, 2ஸ்ரீதர், 3.பிரசாந்த், ஆகிய மூவரை ஏற்கனவே கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டது.மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமைறைவு எதிரிகளை கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண் உத்தரவின் பேரில் மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையாளர் திருமதி.ஏ.ராதிகா வழிகாட்டுதலின் படி, நில மோசடி புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் இவ்வழக்கில் தொடர்புடைய முக்கிய எதிரிகள் ராஜசேகர் (எ) கிரன்ராஜ், மற்றும் குமார், ஆகிய இருவரை கைது செய்தனர். இவர்களிடமிருந்து 1 லேப்டாப் மற்றும் 4 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.மேலும், இந்த வழக்கின் எதிரி குமார் என்பவர் மத்திய குற்றப்பிரிவு மோசடி வழக்கில் ரமேஷ் உல்லா மற்றும் பாரதி உல்லா ஆகியோருக்கு சொந்தமாக சோழிங்கநல்லூர் என்ற இடத்திலுள்ள சுமார் 9,000 சதுரடி இடத்தை எதிரிகள் குமார் மற்றும் இவரது கூட்டாளிகள் சேர்ந்து ஷியாஸ் புதுவிட்டில் என்ற வெளிநாடு வாழ் இந்தியருக்கும், அவரது மனைவிக்கும் விற்பது போன்று போலியான விற்பனை பத்திரத்தை நீலாங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தது போல உருவாக்கி, அதனடிப்படையில், எழும்பூரிலுள்ள தனியார் வங்கியில் அடமானமாக வைத்து இருவர் பெயரிலும் மொத்தம் ரூ5 கோடி கடன் தொகையாக பெற்றும், மேற்படி கடன் தொகையை எதிரிகள் பிரித்து கொண்டு ஷியாஸ் புதுவிட்டில் என்ற மனுதாரரையும், வங்கியையும் ஏமாற்றியது தொடர்பாக ஷியாஸ் புதுவிட்டில் என்பவர் கொடுத்த புகார் மீது, மத்திய குற்றப்பிரிவு, நிலமோசடி புலனாய்வு பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, இவ்வழக்கிலும், மேற்கண்ட எதிரி குமார், என்பவர் கைது செய்யப்பட்டார்.விசாரணையில் எதிரி குமார் மீது ஏற்கனவே மத்திய குற்றப்பிரிவில் 10 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.ch news கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# முதியவர் தவறவிட்ட ரூ.5 லட்சம் மதிப்புள்ள வைரக்கற்கள் பதித்த 6 சவரன் தங்க நகை: போலீசார் உரியவரிடம் ஒப்படைப்பு

**சென்னை ஜூலை 30-**

மாம்பலம் பகுதியில் முதியவர் கால்டாக்ஸியில் தவறவிட்ட சுமார் ரூ.5 லட்சம் மதிப்புள்ள வைரக்கற்கள் பதித்த 6 ½ சவரன் தங்க நகைகளை போலீசார் கண்டுப்பிடித்து உரியவரிடம் ஒப்படைத்தனர்

**நகை மீட்பு**

சென்னை, பெரும்பாக்கம் பகுதியில் வசித்து வரும் ரெட்டி, வ(70) என்பவர் கடந்த 27.ந் தேதியன்று காலை அவரது மனைவி மற்றும் மகளுடன் சுமார் ரூ.5 லட்சம் மதிப்புள்ள வைரக்கற்கள் பதித்த தங்க வளையல்கள்-2, 1 ஜோடி கம்மல் மற்றும் 1 நெக்லஸ் என மொத்தம் 6 ½ சவரன் தங்க நகைகளை எடுத்துக் கொண்டு அவரது வீட்டிலிருந்து கால் டாக்ஸி புக் செய்து தி.நகர், உஸ்மான் ரோட்டில் உள்ள பிரபல நகைகடைக்கு அருகே இறங்கி, நகைகடைக்குள் சென்று அவர் கொண்டு வந்த நகைகளை பார்த்தபோது, நகைப்பையை கால் டாக்ஸியில் மறந்து தவறவிட்டுள்ளது தெரியவந்தது.

**ஒப்படைப்பு**

இது குறித்து ரெட்டி, மாம்பலம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விரைந்து செயல்பட்டு, தீவிர விசாரணை செய்து, மேற்படி கால் டாக்ஸி ஓட்டுநரை கண்டுபிடித்து, கால்டாக்ஸியில் பயணி தவறவிட்ட சுமார் ரூ.5 லட்சம் மதிப்புள்ள தங்க நகைகளை மீட்டு உரிமையாளர் ரெட்டியிடம் பத்திரமாக ஒப்படைத்தனர்.

# ஆலந்தூர் ஆசர்கானா வளைவில் மெட்ரோ ரயில் தூணில் பைக் மோதி வாலிபர் பரிதாப பலி

**சென்னை ஜூலை 30-**

சென்னைஆலந்தூர் ஆசர்கானா வளைவில் உள்ள மெட்ரோ ரயில் தூணில் பைக் மோதி வாலிபர் உயிரிழந்துள்ள நிலையில், அவரது நண்பர் ஆபத்தான முறையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்த பகுதியில் விபத்துக்கள் தொடர்ந்து நடப்பதால் மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். சென்னை தாம்பரம் அஸ்தினாபுரம் ஜெயின் நகரை சேர்ந்தவர் கிஷோர் (18). இவர் பிளஸ் 2 முடித்துவிட்டு கல்லூரியில் சேரவிருந்ததாக தெரிகிறது. அங்குள்ள நேதாஜி தெருவை சேர்ந்தவர் யோனேஷ் (16). இவர் 10ம் வகுப்பு முடித்துள்ளார்.இவர்கள் இருவரும் நேற்று அதிகாலை அஸ்தினாபுரத்தில் இருந்து ஜிஎஸ்டி சாலை வழியாக கிண்டி கத்திப்பாரா நோக்கி பைக்கில் சென்றனர். ஆலந்தூர் ஆசர்கானா பகுதியில் உள்ள வளைவில் திரும்பும்போது கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடிய பைக் அங்குள்ள மெட்ரோ ரயில் தூண் மீது படுவேகமாக மோதியதில் பைக்குடன் இருவரும் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்துள்ளனர். இந்த விபத்து பார்த்ததும் சாலையில் சென்றவர்கள் அவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.இந்த விபத்தில் கிஷோர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதுபற்றி தகவல் கிடைத்ததும் பரங்கிமலை போலீசார் வந்து ரத்தவெள்ளத்தில் உயிருக்கு போராடிய யோனேசை மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதுசம்பந்தமாக பரங்கிமலை உதவி கமிஷனர் சிவகுமார், ஆய்வாளர் அகிலா ஆகியோர் வழக்குபதிவு செய்தனர். கிஷோர் சடலத்தை குரோம்பேட்டை அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். 2 பேரும் ஹெல்மெட் அணியாமல் வந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. இதுகுறித்து பரங்கிமலை போக்குவரத்து புலனாய்வு போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



வளசரவாக்கம் மண்டலம் 155 வது வார்டு ராமாபுரம் வள்ளுவர்சாலையில்புதிதாகஅமைக்கப்பட்டுவரும்மழைநீர் வடிகால்வாய் பணியினை மாமன்ற உறுப்பினர்கள் ராமாபுரம் வ.செல்வகுமார் ,கே.ராஜு ஆய்வு செய்தனர் உடன் வட்ட செயலாளர் ஆ.ராதா செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.

# கல்லூரி மாணவ , மாணவியர்கள் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம்

**சென்னை ஜூலை 30**

சென்னை பெருநகர காவல் துறை சார்பாக போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம். சர் தியாகராய கலை அறிவியல் கல்லூரி மாணவ , மாணவியர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில் தண்டையார்பேட்டை சர் தியாகராய கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் சென்னை பெருநகர காவல் துறை சார்பாக போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் வடக்கு மண்டலம், காவல் அதிகாரிகள் மாணவர்களுக்கு போதை பொருட்களால் ஏற்படும் தீமைகளை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். போதைப்பொருட்கள் நடமாட்டம் குறித்து மாணவர்களுக்கு தகவல் ஏதேனும் கிடைக்கப்பெற்றால், உடனடியாக காவல்துறையினரிடமோ, கல்லூரி பேராசிரியர்களிடமோ தகவல் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. இரகசியம் பாதுகாக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் சுமார் 400 மாணவ மாணவிகள், நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள், போதை பொருளுக்கு எதிரான இளைஞர் குழு உறுப்பினர்கள் பேரார்வத்தோடு பங்கேற்றனர். மாணவர்களிடம் போதைப் பொருட்களால் ஏற்படும் பாதிப்புகளையும், சமூகத்தில் பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகள் குறித்தும் பயன்பாடுகளை தவிர்ப்பது குறித்தும் விளக்கமளித்து, மாணவ மாணவியர்கள் வருங்காலத்தில் போதைப் பொருட்கள் இல்லாத சமூகத்திற்கு பிரதிநிதிகளாக மாறுவதற்கு காவல் அதிகாரிகள் அறிவுரை வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் கல்லூரி பேராசியர்கள் உள்ளிட்ட மாணவ மாணவிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் போதை வேண்டாம் என்று சொல்லுங்கள் என்பதன் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் உள்ளிட்ட பேராசிரியர்கள் மாணவ மாணவியர்கள் காவல்துறை அதிகாரிகள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தெரு மின்கம்பங்கள் மூலம் வருமானம்: சென்னை மாநகராட்சி திட்டம்

**சென்னை ஜூலை 30-**

தெரு மின்கம்பங்கள் மூலம் வருமானம் ஈட்ட மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. சென்னை மாநகராட்சி தெரு மின்கம்பங்களிலும், பேருந்து வழித்தடங்களில் உள்ள சென்டர் மீடியன்களில் விளம்பரங்கள் செய்ய, தனியாருக்கு அனுமதி வழங்கி, 3 ஆண்டுகளில் ரூ.94.6 கோடி வருமானம் ஈட்ட திட்டமிட்டுள்ளது. இதற்காக, 6 ஆண்டு கால பொதுத் தனியார் கூட்டு திட்டத்தை தொடங்கியுள்ளது. இதன்படி, சென்னையில் பேருந்து வழித்தடங்களில் உள்ள தெரு மின்கம்பங்கள் மற்றும் சென்டர் மீடியன்களில் விளம்பரங்கள் வைக்க உரிமை வழங்கப்படும். சென்னை மாநகராட்சி எல்லைக்குள் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மின்கம்பங்களும், 17,000க்கும் மேற்பட்ட சென்டர் மீடியன்களும் விளம்பரங்களுக்கு பயன்படுத்தப்படும். இந்த திட்டத்தை 2024 பிப்ரவரி 22ல் நடந்த மாநகராட்சி கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பொதுவாக, சென்னையில் வெளிப்புற விளம்பரங்களுக்கு (பேனர்கள், போர்டுகள் போன்றவை) குறைவான பணமே ஒதுக்கப்படுகிறது. இப்போது புதிய விளம்பர இடங்களை அறிமுகப்படுத்த, முதலில் ஒரு சோதனைத் திட்டம் (பைலட்) மூலம் பயன்படுத்த மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

அதன்படி, சென்னையை நான்கு பகுதிகளாக (பேக்கேஜ்கள்) பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் எவ்வளவு வாகனங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ளது என்பதை வைத்து விளம்பர இடங்களை ஒதுக்கப்பட்டுள்ளது. அதிக மக்கள் மற்றும் வாகனங்கள் செல்லும் இடங்களில் அதிக விளம்பரங்கள் வரலாம் என மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. முதலில், பகுதி 3-ஐ சோதனை திட்டமாக மூன்று மாதங்கள் நடத்தி, பிறகு மற்ற பகுதிகளுக்கு டெண்டர் விட முடிவு செய்துள்ளது.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே...
பேசுவது எமனாக இருக்கலாம்

# சென்னை வேளச்சேரி பகுதியில் வெள்ளி சங்கிலி: பறிப்பு ஒருவர் கைது

**சென்னை ஜூலை 30-**

பீஹாரைச் சேர்ந்த ஆஷிக் ஆலம் என்பவர் நேற்று முன்தினம் இரவு, வேளச்சேரி, விஜயநகரம் பேருந்து நிறுத்தத்தில் பேருந்துக்காக காத்திருந்தபோது, ஒரு நபர் செல்போனை கொடுங்கள் பேசிவிட்டு தருகிறேன் எனக் கேட்டபோது. ஆஷிக் ஆலம் செல்போன் தர மறுக்கவே, அந்த நபர் தகாத வார்த்தைகளால் பேசி, ஆஷிக் ஆலம் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 29 கிராம் எடை கொண்ட வெள்ளி சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பியோடிவிட்டார். இது குறித்து ஆஷிக் ஆலம் வேளச்சேரி காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

**விசாரணை**

வேளச்சேரி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி சங்கிலி பறிப்பில் ஈடுபட்ட சரண்பாபு, என்பவரை கைது செய்தனர். இவரிடமிருந்து புகார்தாரரின் 29 கிராம் எடை கொண்ட வெள்ளி சங்கிலி மீட்கப்பட்டது. இந்த சங்கிலி பறிப்பு சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# ராசிபுரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள்

## கலெக்டர் துர்காமூர்த்தி ஆய்வு

**நாமக்கல்,ஜூலை 30**

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கலெக்டர் துர்காமூர்த்தி, நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் கலெக்டர் துர்காமூர்த்தி, பிள்ளாநல்லூர் பேரூராட்சி, குருசாமிபாளையம், தோப்புக்காடு மாரியம்மன் கோவில் அருகில் செயல்படும் அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கன்வாடி பணியாளரிடம் மையத்திற்கு வருகை தரும் குழந்தைகள், அவர்களின் எடை, உயரம் ஆகிய விபரத்தினை கேட்டறிந்து, பராமரிக்கப்படும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பிள்ளாநல்லூர் பேரூராட்சி, 14-வது வார்டு சந்தை பாவடி பகுதியில் செயல்படும் நியாயவிலைக்கடையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அத்தியாவசிய பொருட்களின் இருப்பு விபரங்களை கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து, இராசிபுரம் வட்டாரம், சிங்களாந்தபுரம் கிராமத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் சொட்டுநீர்பாசன திட்டத்தின் கீழ் ரூ.1.38 இலட்சம் மானியத்தில் 1.02 ஹெக்டேர் பரப்பளவிலும், புதுச்சத்திரம் வட்டாரம், களங்காணி கிராமத்தில் ரூ.1.36 இலட்சம் மதிப்பீட்டில் 1.01 ஹெக்டேர் பரப்பளவில் விவசாயி செய்து வருவதையும் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். மேலும் ஆர்.புதுப்பட்டியில் பட்டுவளர்ச்சித்துறையின் சார்பில் மானிய விலையில் பட்டு வளர்ப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளதையும் மற்றும் சொட்டுநீர் பாசனம் செய்யப்பட்டுள்ள விவசாய நிலத்தினையும் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

முன்னதாக, கலெக்டர் நாமக்கல் மாநகராட்சி சிலுவம்பட்டி சமுதாயக்கூடம், சீராப்பள்ளி பேரூராட்சி கஸ்பா தெரு கௌடேஸ்வரி அம்மன் திருமண மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, உடனடி தீர்வாக பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.இந்த ஆய்வின்போது, அட்மா குழு தலைவர்கள் மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **M.S.KARTHICK BALAJI S/o. Srinivasan, Date of Birth : 15.08.2001, Permanently Residing at : D.No. 92/7, Opp to Govt. Hr. Sec.School, Ayothiyapattanam (PO), Vazhapadi (TK), Salem District, Tamilnadu - 636 103.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**M.S.KARTHICK BALAJI**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **A.S.SANJAIRAAJ S/o. Sarvaratchahan, Date of Birth : 12.01.2003, Permanently Residing at : D.No. 15/6, Yeri North Black, P.S.K. Thottam, Thirupathi Nagar, Koneripatti (PO), Rasipuram (TK), Namakkal District, Tamilnadu - 637 408.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**A.S.SANJAIRAAJ**

மாண்புமிகு கூடுதல் மகிளா நீதிபதி நீதிமன்றம், சேலம்.
**D.V.C.No. 59/2023**
கவிதா, க/பெ. வீராசாமி
க.எண்.1/210, மோட்டூர் காலனி,
J.வீராணம், சேலம் - 636 122.
...மனுதாரர்
/ Vs /
வீராசாமி, த/பெ.ராமன்,
சாலூர், ஆ.பள்ளிப்பட்டி,
பாப்பிரெட்டிப்பட்டி தாலுக்கா,
தருமபுரி மாவட்டம் - 636 905.
... எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் கவிதா, க/பெ.வீராசாமி அவர்கள் தங்களுக்கு எதிராக கனம் சேலம் மாவட்ட கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் D.V.C.No.59/2023 என்ற வழக்கை தங்களிடமிருந்து வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு வருகின்ற **12.08.2025** -ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வாய்தா தேதியன்று தாங்கள் நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி தங்களது தரப்பு ஆட்சேபணையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக மேற்படி வழக்கில் உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என்பதை இதன் மூலம் அறியவும்.
/கோர்ட் உத்தரவுப்படி/
S.நித்யா,B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்-8.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சி.ய. எண். 227 / 2025 / டி
பழனியப்பன், S/O. பெருமாள்,
க.எண்.95F11C, க. புதூர் மேற்கு தெரு,
எடப்பாடி,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
எடப்பாடி வட்டம் , சேலம் மாவட்டம்.
..... எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது மகன் கமலக்கண்ணன் என்பவர் கடந்த 06 – 07 – 1989 அன்று சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம், சித்தூர் பிட்-1 கிராமம் நத்தம்பட்டி மேல்தெரு என்ற முகவரியில் பிறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்து உள்ளார். மேற்படிமனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
/ நீதிமன்ற உத்தரவு படி /
V. RAJASEKAR, B.com.,B.L.,
ADVOCATE, IDAPPADI.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சி.ய. எண். 241 / 2024 ( டி )
சின்னமயில், த/பெ.லேட். முத்தாகவுண்டர்
க.எண். 55ஏ, மட்டம்பட்டி,
எருமைப்பட்டி கிராமம்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
..... எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாயார் செல்லம்மாள் என்பவர் கடந்த 18 – 07 – 2015 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
/ நீதிமன்ற உத்தரவு படி /
M. JAYAPRADEEP, B.COM.,B.L.
ADVOCATE, SANKARI.

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சமூகம், சேலம்.
சி.ப.எண்.**309/2025/A5**
P.மகாதேவன்,
க.எண்.341/1டி, அம்பாள் ஏரி ரோடு,
தாதகாப்பட்டி, சேலம்-636 006.
...மனுதாரர்
/ Vs /
1. திரு. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், சேலம் மேற்கு.
2.திரு.பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள், சேலம்.
...எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாயார் P.செல்லம்மாள், க/பெ. பொன்னுசாமி என்பவர் கடந்த **08.02.2020** ம் தேதியன்று சேலம் மாவட்டம், சேலம் டவுன், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு பொது பிரிவில் மருத்துவரிடம் காண்பித்தபோது வரும் வழியில் இறந்து விட்டதாக கூறிவிட்டார். மேற்கண்ட முகவரியில் இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக சேலம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன்மூலம்அறிவிக்கப்படுகிறது.
/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/
P.மகாதேவன், மனுதாரர்,
க.எண்.341/1டி, அம்பாள் ஏரி ரோடு,
தாதகாப்பட்டி, சேலம்-636 006.

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சமூகம், மேட்டூர்.
இ.ப.சி.ப.எண்.**640/2025**
குப்புசாமி த/பெ. காளியப்பன்,
க.எண். 3-7-190, நீதிபுரம்,
லக்கம்பட்டி கிராமம், மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.
...மனுதாரர்
/ Vs /
1. திரு. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், மேட்டூர்.
2.திரு.பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள், மேட்டூர்.
...எதிர்மனுதாரர்கள்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாயார் இளையம்மாள் க/பெ. காளியண்ண கவுண்டர், என்பவர் கடந்த **10.12.2008** ம் தேதியன்று சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், லக்கம்பட்டி கிராமம், நீதிபுரம், க.எண்.3-7-190 என்ற முகவரியில் உள்ள வீட்டில் இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக மேட்டூர் வருவாய்கோட்டாட்சியர் நீதிமன்றத்தில்நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன்மூலம்அறிவிக்கப்படுகிறது.
/நீதிமன்ற உத்தரவுப்படி/
குப்புசாமி த/பெ. காளியப்பன்,மனுதாரர்,
க.எண். 3-7-190, நீதிபுரம்,
லக்கம்பட்டி கிராமம், மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

சேலம் மாவட்ட குடும்ப நல நீதிமன்றம் முன்பாக
**M.C.No. 39/2024**
கவிதா மற்றும் பலர்
க.எண்.1/210, மோட்டூர் காலனி,
J.வீராணம், சேலம் - 636 122.
...மனுதாரர்
/ Vs /
வீராசாமி, த/பெ.ராமன்,
சாலூர், ஆ.பள்ளிப்பட்டி,
பாப்பிரெட்டிப்பட்டி தாலுக்கா,
தருமபுரி மாவட்டம் - 636 905.
... எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் கவிதா, க/பெ.வீராசாமி அவர்கள் தங்களுக்கு எதிராக கனம் சேலம் மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் M.C.No.39/2024 என்ற வழக்கை தங்களிடமிருந்து விவாகரத்து கோரி மற்றும் ஜீவனாம்சம் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு வருகின்ற **19.08.2025** -ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வாய்தா தேதியன்று தாங்கள் நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி தங்களது தரப்பு ஆட்சேபணையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக மேற்படி வழக்கில் உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என்பதை இதன் மூலம் அறியவும்.
/கோர்ட் உத்தரவுப்படி/
S.நித்யா,B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்-8.

**பட்டணம் (முதல்நிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை**
சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்-2025-2026
ந.க.எண்.345/2025 நாள். 28.07.2025

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | செலுத்த வேண்டிய தொகை - முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1சதவீதம் | ஒப்பந்த தாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | பட்டணம் பேரூராட்சி, வார்டு எண்.08, பள்ளிக்கூடத் தெரு, புதுப்பட்டி மெயின்ரோடு பகுதியில் 40 அடி நீளத்தி-ற்கான பயணிகள் நிழற்கூடம் அமைத்தல். | 35.00 | 35,000 | Class-I | 6 மாதங்கள் |

பட்டணம் பேரூராட்சி 2024-2025-ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறை (Two cover System) கொண்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 12.08.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணி வரை இணையதளம் வாயிலாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 13.08.2025 புதன்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.

1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை பட்டணம் முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 12.08.2025 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
பட்டணம் பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

வெ.ஆ.எண்/செ.ம.தொ.அ./விளம்பர எண்.194/ நாமக்கல். நாள்.29.07.2025

# போச்சம்பள்ளி அருகே உங்களுடன் ஸ்டாலின் முகாம்: தே.மதியழகன் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்

**கிருஷ்ணகிரி,ஜூலை 30**

புளியம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் புளியம்பட்டி மற்றும் வலசகவுண்டனூர் ஊராட்சி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஒன்றியம் போச்சம்பள்ளி அடுத்த புளியம்பட்டி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி, போச்சம்பள்ளி வட்டாட்சியர் சத்யா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில், குமரேசன், புளியம்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்

எஸ்.ஆர் ரங்கநாதன் ஆகியோர் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளராக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான

தே.மதியழகன் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தார். இம்முகாமில், மருத்துவம், கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை அரங்கு, இ-சேவை மையம், ஆதார் மையம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை பெறுவதற்கான அரங்கு உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பாக அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் பெறப்படும் விண்ணப்பங்கள் இன்றே இணையதளத்தில் பதிவு செய்யப்படும். மேலும் மனுக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு 45 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படும்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை, பெயர் மாற்றம் உள்ளிட்ட மனுக்களுக்கு விண்ணப்பம் அளித்த அன்றே உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முகாமிற்கு வருகை தரும் பொது மக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ முகாம்கள் மூலம் மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு, சிகிச்சைகள் வழங்கப்பட்டது. வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பாக, ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தின் கீழ், பப்பாளி, எலுமிச்சை, கொய்யா மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்கினர். நிகழ்ச்சியில் மத்தூர் ஒன்றிய செயலாளர் வசந்தரசு, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இளையராஜா, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் அம்மன் ராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கௌதம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அர்ஜுனன் மற்றும் வருவாய்த்துறை ஊரக வளர்ச்சி துறை உள்ளிட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர் இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் கலெக்டர் இரா.பிருந்தாதேவி மரக்கன்றுகளை நட்டு வைத்தார்



**சேலம்,ஜூலை 30**

சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மரக்கன்றுகளை நட்டு வைத்தார்கள்.

சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் காலியாக உள்ள 20 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தினை பசுமையாக்கும் வகையில் 200 தென்னை மரக்கன்றுகள் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, அவர்களால் 07.07.2025 அன்று நட்டு வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இப்பசுமைச்சூழ்நிலையை மேலும் அதிகரிக்கும் பொருட்டு இன்றையதினம் கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, அவர்களால் 500 மாங்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

அனைத்து மரக்கன்றுகளுக்கும் சொட்டு நீர் பாசனத்தின் வாயிலாக உரிய நீர் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் ஜெ.தேவிமீனாள், துணை முதல்வர் எஸ்.செந்தில்குமாரி, மருத்துவ கண்காணிப்பாளர் ராஜ்குமார் உட்பட பேராசிரியர்கள் மற்றும் மருத்துவ மாணவ, மாணவிகள், தன்னார்வலர்கள் கலந்துகொண்டனர்.

# சேலத்தில் நடைபெற்ற பள்ளி-கல்லூரி மாணவர்களுக்கான திருக்குறள் போட்டிகளில் 708 மாணவர்கள் பங்கேற்று சாதனை



**சேலம்,ஜூலை 30**

சேலத்தில், ஸ்ரீராம் இலக்கியக் கழகம் நடத்திய பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கு இடையேயான திருக்குறள் பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் 708 மாணவர்கள் பங்கேற்று சாதனை புரிந்துள்ளனர்.

கடந்த 35 ஆண்டுகளாக சேலத்தில் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டாலும் கூட, இவ்வளவு அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் கலந்து கொண்டது இதுவே முதல் முறையாகும்.

அண்மையில் (ஜூலை 26 அன்று) சேலம், பாலபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், ஸ்ரீராம் இலக்கியக் கழகம், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான திருக்குறள் பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகளை நடத்தியது.இதில் ஓவியப் போட்டியில் இடைநிலைப் பிரிவில் 146 மாணவர்களும், மேல்நிலைப் பிரிவில் 95 மாணவர்களும், கல்லூரிப் பிரிவில் 60 மாணவர்களும், ஆக மொத்தம் 301 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பேச்சுப் போட்டியில் இடைநிலைப் பிரிவில் 121 மாணவர்களும், மேல்நிலைப் பிரிவில் 50 மாணவர்களும், கல்லூரிப் பிரிவில் 54 மாணவர்களும், ஆக மொத்தம் 225 மாணவர்கள் கலந்து கொண்டனர். கட்டுரைப் போட்டியில், இடைநிலைப் பிரிவில் 58 மாணவர்களும், மேல்நிலைப் பிரிவில் 51 மாணவர்களும், கல்லூரி பிரிவில் 73 மாணவர்களும் என மொத்தம் 182 மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் நிறைவு விழாவில், பாரதி வித்யாலயா சங்கத்தின் தலைவரும், வழக்கறிஞருமாகிய, என். சுரேஷ் தலைமை தாங்கினார். பாலபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் திருமதி வி. சுலோச்சனா வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக, ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்தின் முதுநிலை மண்டல மேலாளர். பி. பாலமுருகன் வரவேற்புரை ஆற்றினார். இறுதியில், ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனத்தின் ஆத்தூர் கிளை மேலாளர். எஸ். சிவக்குமார் நன்றியுரை கூறினார்.

# ஒசூர் மாநகராட்சி 26-வது வார்டிற்குட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் குறித்து மேயர் சத்யா ஆய்வு

**ஒசூர்,ஜூலை 30**

ஒசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 26-வது வார்டு பகுதிகளில் காளே குண்டா பகுதிகளில் கழிவுநீர் கால்வாய், தார் சாலை, குடிநீர் பிரச்சனை இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்து வந்ததை தொடர்ந்து ஒசூர் மாநகர மேயர் வணக்கத்திற்குரிய சத்யா நேரில் ஆய்வு மேற்கொண்டு 26-வது வார்டிற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நேரடியாக ஆய்வு மேற்க்கொண்ட அவர், சாக்கடை பிரச்சனை, தார் சாலை, குடிநீர் பிரச்சனைகள் குறித்து வீடுகள் தோறும் பார்வையிட்டார் முதலிய அடிப்படை வசதிகளை மேம்படுத்தித் தருமாறு மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.பின்னர் அப்பகுதி மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் துணை மேயர் ஆனந்தய்யா பொறியாளர் விக்டர் ராஜ் உதவி பொறியாளர் பிரபாகரன், Vஉடன் இருந்தனர்.

# கிருஷ்ணகிரியில் சாலை பணியாளர்கள் சங்கம் சார்பில் போராட்டம்




**கிருஷ்ணகிரி,ஜூலை 30**

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர்கள் சங்கம் சார்பில் கிருஷ்ணகிரி நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் அலுவலகம் எதிரில் தீ பந்தம் கையில் ஏந்தி மாலை நேர தர்ணா போராட்டம் கோட்டத் தலைவர் திம்மராஜ் தலைமையில், முன்னாள் மாவட்ட தலைவர் தேவன் துவக்க உரையில் பாலகிருஷ்ணன், திருப்பதி, சீனிவாசன் திருப்பதி குமார், குமரேசன், மாநில செயற்குழு உறுப்பினர் சின்னசாமி, கோட்ட செயலாளர் ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில், சாலை பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு தீர்ப்பு படி பணிக்காலமாக முறைப்படுத்த வேண்டும், மேல் முறையீடு செய்யாத உயர் நீதிமன்ற ஆணையை அமல்படுத்த வேண்டும், கிருஷ்ணகிரி கோட்டத்தில் பணிபுரியும் சாலை பணியாளர்களுக்கு சாலை விட்டு மற்ற சாலை பணிக்கு தொலைதூரம் சென்று பணி மேற்கொள்வதால் சாலை பணியாளர்களுக்கு பயணப்படி வழங்கிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி தீப்பந்தம் கையில் ஏந்தி மாலை நேரத்தில் தர்ணா போராட்டம் நடைபெற்றது. மாநிலத் துணைத் தலைவர் தினேஷ், மாவட்டத் தலைவர் சந்திரன் உள்ளிட்ட ஏராளமான சாலை பணியாளர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதியில் கோட்டப்பொருளாளர் சுபாஷ் சந்திரபோஸ் நன்றியுரை கூறினார்.

# சேலத்தில் அப்துல்கலாம் நினைவு தினம் அனுசரிப்பு



**சேலம்,ஜூலை 30**

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் நினைவு நாளை முன்னிட்டு சேலம் டவுன் இரயில் நிலையம் பாரதியார் சிலை அருகே ரோட்டரி கிளப் ஆப் சேலம் பவர் கிராண்ட் கிளப் சார்பில் அஞ்சலி செலுத்தினர். மறைந்த மக்கள் ஜனாதிபதி மனிதரில் புனிதர் ஏவுகணை நாயகர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நினைவு நாளை முன்னிட்டு ரோட்டரி கிளப் ஆப் சேலம் பவர் கிராண்ட் கிளப்பின் சாசனத் தலைவர் ரொட்டேரியன் ஆர்.செல்வம், கிளப் தலைவர் ரொட்டேரியன் எம்.சசிகுமார், செயலாளர் ரொட்டேரியன் ஆர்.பாலசுப்பிரமணியம் மற்றும் கிளப் நிர்வாகிகள் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு அப்துல் கலாம் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி வருகை புரிந்த அனைவருக்கும் மரக்கன்றுகள் மற்றும் அப்துல் கலாம் அவர்களின் பொன்மொழி புத்தகம் கிளப் சார்பில் வழங்கப்பட்டது.சிறப்பு விருந்தினராக ரொட்டேரியன் ஜெ.எம்.பூபதி, அப்துல் கலாம் பற்றி சிறந்த கருத்துக்களை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கிளப் சார்பில் முன்னாள் தலைவர்கள் ரொட்டேரியன் டி.எஸ்.வேணுகோபால், ரொட்டேரியன் எஸ்.மாதேஸ்வரன், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் மரக்கன்றுகளும் அப்துல் கலாம் பொன்மொழி அடங்கிய புத்தகம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம் - 7
மின்னணு ஒப்பந்தப்புள்ளி திருத்த அறிவிப்பு
மொத்த தொகை ஒப்பந்த முறை

பின்வரும் இவ்வலுவலக மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் கோரப்பட்டு மற்றும் 21.07.2025 அன்று வெளியிட்ட திருத்த அறிவிப்பில் குறிப்பிட்டிருந்த இருபத்து எட்டு (28) பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் கிடைக்கப்பெறும் நாட்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் இறுதிநாள் ஆகியவற்றிற்கு நிர்வாகக் காரணங்களால் கீழ்க்கண்ட திருத்தங்கள் வெளியிடப்படுகிறது.

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்: 21/2025–2026/க.பொ/க(க&ப) வட்டம் / சேலம் / நாள்: 15.07.2025 மற்றும் 21.07.2025 அன்று வெளியிட்ட திருத்த அறிவிப்பு**

| | முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது | தற்போது அறிவிக்கப்படுவது |
|---|---|---|
| மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் கிடைக்கும் காலம் | 29.07.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 13.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை | 04.08.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 18.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| மின்னணு ஒப்பந்தப்புள்ளி பெற கடைசி நாள் மற்றும் நேரம் | 13.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை | 18.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| மின்னணு ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் | 13.08.2025 பிற்பகல் 3.30 மணிக்கு | 18.08.2025 பிற்பகல் 3.30 மணிக்கு |

இதர நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (க&ப) வட்டம், சேலம் – 7.
செ.ம.தொ.இ/3877/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட அமைப்பு - ஒப்பந்த முறை : மொத்தத் தொகை

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 14/VLR-CLE/2025-2026, நாள்: 29.07.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் வேலூர் பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிகளுக்கு 22.08.2025 அன்று இறுதி நாளாக கொண்டு அலுவலக நேரப்படி பிற்பகல் 3.00 மணிவரையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவுசெய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 31.07.2025 முதல் 22.08.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம். பெறப்படும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 22.08.2025 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| | **வேலூர் மாவட்டம்** | | | |
| 1 | விரிஞ்சிபுரம் அ.மே.நி. பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 68.06 | ரூ. 44,500 /- | 5 மாதங்கள் |
| 2 | வஞ்சூர் அ.மே.நி. பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 68.06 | ரூ. 44,500 /- | 5 மாதங்கள் |
| 3 | லத்தேரி அ.ஆ.மே.நி. பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 68.06 | ரூ. 44,500 /- | 5 மாதங்கள் |
| 4 | கொட்டமிட்டா அ.மே.நி. பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 68.06 | ரூ. 44,500 /- | 5 மாதங்கள் |
| 5 | ஒடுக்கத்தூர் அ.பெ.மே.நி. பள்ளியில் அறிவியல் ஆய்வகம் மற்றும் கழிவறை கட்டடம் | 70.01 | ரூ. 45,500 /- | 5 மாதங்கள் |
| 6 | கீழ்அரசம்பட்டு அ.மே.நி பள்ளியில் 4 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 91.05 | ரூ. 56,000 /- | 6 மாதங்கள் |
| 7 | வடுகந்தாங்கல் அ.மே.நி. பள்ளியில் 5 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 112.98 | ரூ. 66,500 /- | 6 மாதங்கள் |
| 8 | அழிஞ்சிகுப்பம் அ.மே.நி. பள்ளியில் 6 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 135.75 | ரூ. 78,000 /- | 7 மாதங்கள் |
| 9 | சோழவரம் அ.மே.நி. பள்ளியில் 6 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 135.75 | ரூ. 78,000 /- | 7 மாதங்கள் |
| 10 | பிரம்மபுரம் அ.மே.நி. பள்ளியில் 6 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 135.75 | ரூ. 78,000 /- | 7 மாதங்கள் |
| 11 | குடியாத்தம் ஆர்.எஸ். அ.மே.நி. பள்ளியில் 7 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 158.53 | ரூ. 89,500 /- | 6 மாதங்கள் |
| 12 | லத்தேரி அ.பெ.மே.நி. பள்ளியில் 7 கூடுதல் வகுப்பறை, கழிவறை கட்டுதல் மற்றும் குடிநீர் வசதி செய்தல் | 180.96 | ரூ. 1,00,500 /- | 6 மாதங்கள் |
| 13 | தட்டப்பாறை அ.மே.நி. பள்ளியில் 8 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 181.30 | ரூ. 1,01,000 /- | 6 மாதங்கள் |
| 14 | பனமடங்கி அ.மே.நி. பள்ளியில் 8 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 181.30 | ரூ. 1,01,000 /- | 6 மாதங்கள் |

ஒப்பந்ததாரர் தகுதி: வகுப்பு IV மற்றும் அதற்குமேல் (ஒவ்வொரு பணிக்கும்). தள ஆய்வுச் சான்று விண்ணப்பிக்க கடைசி நாளும் இடமும்: 18.08.2025, செயற்பொறியாளர், பொபது., அலுவலகம், கட்டட (க & ப) கோட்டம், வேலூர். முன்வைப்புத் தொகைகள் இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். விலை வீத மாறுதல் (Price Adjustment Clause) மேற்காணும் பணிகளில் வரிசை எண்: 7 முதல் 14 வரை உள்ள பணிகளுக்கு மட்டும் பொருந்தும். இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், வேலூர் - 1
செ.ம.தொ.இ/3884/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட அமைப்பு - ஒப்பந்த முறை : மொத்தத் தொகை

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.13 / VLR – CLE / 2025 – 2026 / Dated: 29.07.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் வேலூர் பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிகளுக்கு **21.08.2025** அன்று இறுதி நாளாக கொண்டு அலுவலக நேரப்படி **பிற்பகல் 3.00 மணிவரையில்** மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **31.07.2025 முதல் 21.08.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை** இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னனு முறையில் சமர்ப்பிக்கலாம். பெறப்படும் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் **21.08.2025 அன்று பிற்பகல் 4.00 மணியளவில்** மின்னனு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி. உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| | **இராணிப்பேட்டை மாவட்டம்** | | | |
| 1 | **திருப்பாற்கடல்** எஸ்.தே. அ.மே.நி. பள்ளியில் 2 கூடுதல் வகுப்பறை மற்றும் கழிவறை கட்டடம் | 63.85 | ரூ.42,000 /- | 5 மாதங்கள் |
| 2 | **பூண்டி** அ.மே.நி. பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 68.06 | ரூ.44,500 /- | 6 மாதங்கள் |
| 3 | **குருவராஜபேட்டை** அ.பெ.மே.நி. பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 68.06 | ரூ.44,500 /- | 6 மாதங்கள் |
| 4 | **தணிகைபோளூர்** அ.உ.நி. பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 68.06 | ரூ.44,500 /- | 6 மாதங்கள் |
| 5 | **ரெண்டாடி** அ.மே.நி. பள்ளியில் 3 கூடுதல் வகுப்பறை மற்றும் கழிவறை கட்டடம் | 86.83 | ரூ.53,500 /- | 6 மாதங்கள் |
| 6 | **வள்ளுவம்பாக்கம்** அ.மே.நி. பள்ளியில் 4 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 91.05 | ரூ.56,000 /- | 6 மாதங்கள் |
| 7 | **ஆயர்பாடி** அ.உ.நி. பள்ளியில் 5 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 112.98 | ரூ.66,500 /- | 7 மாதங்கள் |
| 8 | **மூதூர்** அ.மே.நி. பள்ளியில் 8 கூடுதல் வகுப்பறை கட்டடம் | 181.30 | ரூ.1,01,000 /- | 6 மாதங்கள் |

ஒப்பந்தக்காரர் தகுதி: வகுப்பு IV மற்றும் அதற்குமேல் (ஒவ்வொரு பணிக்கும்)
தள ஆய்வுச் சான்று விண்ணப்பிக்க கடைசி நாளும், இடமும்: 14.08.2025, செயற்பொறியாளர், பொபது., அலுவலகம், கட்டட (க&ப) கோட்டம், இராணிப்பேட்டை.
முன் வைப்பு தொகைகளை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். விலை வீத மாறுதல் (Price Adjustment Clause) மேற்காணும் பணிகளில் வரிசை எண்.7 மற்றும் 8ல் பணிகளுக்கு மட்டும் பொருந்தும். இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், வேலூர்–1.
செ.ம.தொ.இ / 3883 / ஒப்பந்தப்புள்ளி / 2025

## 5-வது டெஸ்ட் போட்டி:
# அறிமுகமாகிறார் அர்ஷ்தீப் சிங்?

**லண்டன், ஜூலை 30-**
இங்கிலாந்துக்கு எதிரான 5-வது டெஸ்டில் இந்திய அணியில் இடது கை பந்து வீச்சாளரான அர்ஷ்தீப் சிங் அறிமுகம் ஆக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

**இங்கிலாந்து முன்னிலை...**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் (4-வது போட்டி டிரா) முன்னிலையில் உள்ளது. இதனை யடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நாளை 31-ந் தேதி தொடங்குகிறது.

**கட்டாய வெற்றி...**
தொடரை சமன் செய்ய இந்த போட்டியில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நெருக்கடியில் இந்திய அணி விளையாட உள்ளது. இதன் காரணமாக இந்திய அணியின் பிளேயிங் லெவனில் சில மாற்றங்கள் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அர்ஷ்தீப் சிங் அறிமுகம்...**
அந்த வரிசையில் இங்கிலாந்துக்கு எதிரான 5-வது டெஸ்டில் இந்திய அணியில் இடது கை பந்துவீச்சாளரான அர்ஷ்தீப் சிங் அறிமுகம் ஆக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த போட்டியிலே (4-வது டெஸ்ட்) அறிமுகம் ஆவார் என்று எதிர்பார்த்த நிலையில், கடைசி நேரத்தில் கையில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகினார். இந்நிலையில் இந்த 5-வது போட்டியில் அவர் விளையாடுவது ஏறக்குறைய உறுதி ஆகி உள்ளதாக கூறப்படுகிறது. பல முன்னாள் வீரர்களும் தொடரின் ஆரம்பத்திலிருந்தே அர்ஷ்தீப் சிங் களமிறங்க வேண்டும் என்று கூறி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## த.வெ.க. உறுப்பினர் சேர்க்கை செயலி: இன்று வெளியிடுகிறார் விஜய்

**சென்னை, ஜூலை 30-**
தமிழ்நாட்டின் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் என்ற பெயரில் நடிகர் விஜய் கட்சியை தொடங்கி தனது அரசியல் பணிகளில் தீவிரம் காட்டி வருகிறார். மேலும் கூட்டணி பேச்சுக்கே இடமில்லை என்று கூறி, தனித்து போட்டியிட உள்ளார். மேலும் ஆகஸ்ட் மாதம் த.வெ.க. கட்சியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற உள்ளது. குறிப்பாக சட்டமன்ற தேர்தல் நடைபெற இன்னும் 8 மாதங்களே எஞ்சியுள்ள நிலையில், மதுரை மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

முன்னதாக, தமிழக வெற்றிக்கழகத்தில் இணைய செயலி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது. மேலும் 2 கோடி உறுப்பினர்களை தமிழக வெற்றி கழகத்தில் சேர்க்க வேண்டும் என்று கட்சி நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில் சுமார் ஒன்றரை கோடிக்கும் அதிகமானவர்கள் கட்சியில் இணைந்தனர். இதனைத் தொடர்ந்து கட்சி நிர்வாகிகளின் அரசியல் பணி செயல்பாடுகளை கண்காணிக்க த.வெ.க. தலைவர் விஜய் தலைமையில் வாட்ஸ்அப் குழு உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தமிழகவெற்றிக்கழகத்தில் இணைய உறுப்பினர் சேர்க்கைக்காக புதிய செயலியை தலைவர் விஜய் அறிமுகம் செய்ய உள்ளதாக கடந்த சில தினங்களாக பேசப்பட்டு வந்த நிலையில், த.வெ.க. உறுப்பினர் சேர்க்கை செயலியை இன்று (ஜூலை 30) வெளியிடுகிறார் அக்கட்சித் தலைவர் விஜய். பனையூர் தலைமை அலுவலகத்தில் இன்று நடைபெறவுள்ள த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் மற்றும் தொகுதி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் செயலியை வெளியிட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனை தொடர்ந்து செயலி அறிமுகம் செய்ததும் உறுப்பினர் சேர்க்கை பணி தொடங்கும் எனதெரிகிறது.



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியை சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் இந்திய ஜனநாயக கட்சித் தலைவர் டாக்டர் ரவி பச்சமுத்து நேரில் சந்தித்து, எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழக நிறுவனரும், வேந்தருமான டாக்டர் பாரிவேந்தரின் 86-வது பிறந்த நாள் விழா 23.8.2025 அன்று எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற உள்ளதையொட்டி, விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்க அழைப்பு விடுத்தார்.

## கடைசி டெஸ்ட் போட்டி:
# இந்திய அணியில் மாற்றம்?

**லண்டன், ஜூலை 30-**
கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் பிளேயிங் லெவனில் சில மாற்றங்கள் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கடைசி டெஸ்ட்...**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் (4-வது போட்டி டிரா) முன்னிலையில் உள்ளது. இதனை யடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் வருகிற 31-ந் தேதி தொடங்குகிறது.

**கட்டாய வெற்றி...**
தொடரை சமன் செய்ய இந்த போட்டியில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நெருக்கடியில் இந்திய அணி விளையாட உள்ளது. இதன் காரணமாக இந்திய அணியின் பிளேயிங் லெவனில் சில மாற்றங்கள் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி பிளேயிங் லெவனில் குல்தீப் யாதவ் மற்றும் ஆகாஷ் தீப்பை சேர்க்க இந்திய அணி நிர்வாகம் முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆனால் அவர்கள் யார்-யாருக்கு பதிலாக இடம்பெறுவார்கள் என்பது குறித்து எந்த வித தகவலும் வரவில்லை.

**ஆகாஷ் தீப்...**
ஒருவேளை ஷர்துல் தாகூருக்கு பதிலாக குல்தீப் யாதவும், அன்ஷுல் கம்போஜ்-க்கு பதிலாக ஆகாஷ் தீப்பும் இடம் பெறலாம் என கருத்துகள் நிலவுகின்றன. மேலும் பும்ரா விளையாடுவாரா? இல்லையா? என்பது குறித்து அடுத்த 24 மணி நேரத்தில் முடிவெடுக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

## காயம் குறித்து ரிஷப் பண்ட்

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4-வது போட்டி மான்செஸ்டரில் நடைபெற்றது. இந்த போட்டி டிராவில் முடிந்தது. இந்த போட்டியின் முதல் நாளில் இந்திய விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பாதியில் வெளியேறினார். இருப்பினும் 2-வது நாளில் இந்திய அணி விக்கெட்டுகளை இழந்தபோது வலியை பொருட்படுத்தாமல் மீண்டும் களத்திற்கு வந்து அரைசதம் அடித்து அசத்தினார். இதனால் ரிஷப் பண்டை பல முன்னாள் வீரர்கள் பாராட்டினர்.

இந்நிலையில் காலில் ஏற்பட்டுள்ள காயம் குறித்து ரிஷப் பண்ட் தனது எக்ஸ் பக்கத்தில் உருக்கமாக பதிவிட்டுள்ளார். அதில், "எனக்கு கிடைத்த அன்பையும், வாழ்த்துகளையும் நினைத்து மகிழ்ச்சியாக உள்ளது. இது ஒரு உண்மையான பலத்தை அளித்துள்ளது. என்னுடைய காயம் குணமடைந்து வருகிறது. இருந்தாலும் பொறுமையுடன் இருந்து முழு உடற்தகுதி பெறும் வரை காத்திருப்பேன். நாட்டிற்காக விளையாடுவது எப்போதும் என் வாழ்க்கையின் பெருமைமிக்க தருணமாகும். மீண்டும் களத்திற்கு வர காத்திருக்க முடியவில்லை. என்று பதிவிட்டுள்ளார்.

## சாதனை பயணம் தொடரும்: திவ்யா

ஜார்ஜியாவில் நடைபெற்ற உலக கோப்பை செஸ் போட்டியில் இந்திய வீராங்கனை திவ்யா தேஷ் முக் பட்டம் பெற்றார். அவர் இறுதிப்போட்டியில் சக நாட்டைச் சேர்ந்த கோனேரு ஹம்பியை தோற்கடித்தார். இதன் மூலம் உலக கோப்பை செஸ் போட்டி யில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற வரலாற்றை அவர் பெற்றார். உலக கோப்பை போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம் திவ்யா கிராண்ட் மாஸ்டர் அந்தஸ்தையும் பெற்றார்.

உலக கோப்பை செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றது குறித்து திவ்யா தேஷ்முக் நிருபர்களிடம் கூறியதாவது:- இந்த போட்டி தொடங்குவதற்கு முன்பு நான் பட்டம் வெல்வேன் என்று எதிர்பார்க்கவில்லை. பலம் வாய்ந்த வீராங்கனைகளுடன் மோதினேன். உலக தரவரிசையில் 5-வது இடத்தில் உள்ள ஹம்பியை வீழ்த்தி பட்டம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. நான் இன்னும் நிறைய சாதிக்க வேண்டும். எனது சாதனை பயணம் தொடரும். இது வெறும் தொடக்கம் என்று நான் நம்புகிறேன். இவ்வாறு திவ்யா தேஷ் முக் கூறியுள்ளார்.

## தாக்குதல் நடத்தப்போவதை பாகிஸ்தானிடம்
# முன்கூட்டியே தெரிவித்தது ஏன்? பார்லி.யில் ராகுல்காந்தி கேள்வி



**புதுடெல்லி, ஜூலை 30-**
தாக்குதல் நடத்தப்போவதை பாகிஸ்தானிடம் முன்கூட்டியே தெரிவித்தது ஏன்? என்று பார்லி.யில் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் குறித்த விவாதத்தின்போது மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி எம்.பி. பேசியதாவது; "பஹல்காம் தாக்குதலில் இறந்தவர்களை எனது உறவினர்களை இழந்ததாக கருதுகிறேன். தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களின் குடும்பத்தினரை சந்தித்து துயரத்தை பகிர்ந்து கொண்டோம். பஹல்காம் தாக்குதலுக்கு பிறகு எதிர்க்கட்சிகள் பொறுப்புணர்வுடன் செயல்பட்டன. ஆபரேஷன் சிந்தூர் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாக செயல்படுகின்றன. இந்திய ராணுவத்திற்கு மலை போன்ற உறுதியான ஆதரவை எதிர்க்கட்சிகள் அளித்தன.

இந்திய ராணுவத்தின் தீரத்தை யாரும் கட்டுப்படுத்தி வைக்க முடியாது. இந்திய ராணுவத்துடன் கை குலுக்கினாலே தெரியும் அவர்களது பலம். ராணுவத்தை சரியாக பயன்படுத்தும் திறன் 1971இல் இருந்தது .1971இல் ஜெனரல் மனேக்ஷாவுக்கு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி முழு சுதந்திரம் கொடுத்தார். ராணுவத்துக்கு முழு சுதந்திரம் கொடுத்ததன் பலனாக பாக். படைகள் நம்மிடம் சரணடைந்தன.

ஆபரேஷன் சிந்தூர் நடக்கும்போதே பாகிஸ்தானை தொடர்புகொண்டதாக அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியது அதிர்ச்சி அளிக்கிறது. பாகிஸ்தானில் தாக்குதல் நடத்தப் போகிறோம் என பாகிஸ்தானிடமே அரசு தகவல் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானின் ராணுவ கட்டமைப்புகளை தாக்க வேண்டாம் எனக் கூறியது மிகப் பெரிய தவறு. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது நமது விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது உண்மை. இந்திய விமானங்கள் வீழ்த்தப்படவில்லை என்றும், ராணுவத்துக்கு இழப்பு ஏற்படவில்லை என்றும் தைரியமிருந்தால் பிரதமர் அவையில் தெளிவுபடுத்தட்டும்.

இந்தியா-பாகிஸ்தான் போரை நானே நிறுத்தினேன் என 29 முறை டிரம்ப் கூறியுள்ளார். ஆபரேஷன் சிந்தூர் விவகாரத்தில் டிரம்ப் பொய் சொல்கிறார் என சொல்லும் தைரியம் மோடிக்கு உள்ளதா? பஹல்காம் தாக்குதலின் மூளையான பாகிஸ்தான் ராணுவத் தளபதி, டிரம்ப் உடன் விருந்து சாப்பிடுகிறார். பிரதமர் மோடி டிரம்பிடம் இதை கேட்க முடிந்ததா? தனது இமேஜை பாதுகாக்க ராணுவத்தை பயன்படுத்துகிறார் பிரதமர் மோடி. பாதுகாப்புப் படைகளை தவறாக அவர் பயன்படுத்துவது அபாயகரமானது.

இந்தியப் படைகளின் நகர்வு குறித்த தகவல்களை பாகிஸ்தானுக்கு சீனா வழங்கியுள்ளது. ஆனால், சீனா என்ற பெயரையே பாதுகாப்பு மந்திரியும், வெளியுறவு மந்திரியும் சொல்லவில்லை. தாக்குவது என்று முடிவெடுத்துவிட்டால், ராணுவத்திற்கு முழு சுதந்திரம் அளிக்க வேண்டும். அவர்களின் கைகளைக் கட்டிவிட்டு போருக்கு அனுப்பக் கூடாது. ஒரு இக்கட்டான சூழலை எப்படி சமாளிப்பது என தெரியாத நிலையில் அரசு உள்ளது. போரின் அடிப்படையே நமது பாதுகாப்புத்துறை மந்திரிக்கு தெரியவில்லை." இவ்வாறு அவர் பேசினார்.

# ஓவல் மைதான கண்காணிப்பாளருடன் கவுதம் காம்பீர் வாக்குவாதம்

**லண்டன், ஜூலை 30-**
ஓவல் மைதான கண்காணிப்பாளருடன் காம்பீர் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**ஓவல் மைதானத்தில்...**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் (4-வது போட்டி டிரா) முன்னிலையில் உள்ளது. இதனை யடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் வருகிற 31-ந் தேதி தொடங்குகிறது.

**சமன் செய்ய தீவிரம்...**
தொடரை சமன் செய்ய இந்த போட்டியில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நெருக்கடியில் இந்திய அணி விளையாட உள்ளது. இதனால் இந்த போட்டியில் வெற்றி பெறும் நோக்கில் இந்திய அணியினர் ஓவல் மைதானத்தில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**வாக்குவாதம்...**
இந்நிலையில் பயிற்சி மேற்கொண்டு வரும் இந்திய அணியினரிடம் ஓவல் மைதான கண்காணிப்பாளர் ஏதோ கூறியதாக தெரிகிறது. இதனால் கடுப்பான தலைமை பயிற்சியாளர் கவுதம் காம்பீர், மைதான கண்காணிப்பாளருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

**இணையத்தில் வைரல்...**
அதில் கவுதம் காம்பீர், மைதான கண்காணிப்பாளரை நோக்கி, "நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எங்களுக்குச் சொல்ல தேவையில்லை. நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எங்களிடம் சொல்ல முடியாது. நீங்கள் ஒரு மைதான கண்காணிப்பாளர். எனவே நீங்கள் மைதான கண்காணிப்பாளர் போல இருங்கள்" என்று கூறினார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

## கனடா ஓபன்: நவோமி முன்னேற்றம்

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் கனடா ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி டொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையரில் நேற்று நடைபெற்ற முதல் சுற்றில் ஜப்பானின் நவோமி ஒசாகா, கனடாவின் அரினா அர்செனால்ட் உடன் மோதினார். இதில் சிறப்பாக ஆடிய ஒசாகா 6-4, 6-2 என்ற செட் கணக்கில் எளிதில் வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் கிரீஸ் வீராங்கனை மரியா சக்காரி 6-2, 3-6, 7-5 என்ற செட் கணக்கில் கனடாவின் கார்சன் பிரான்ஸ்டைனை வீழ்த்தினார். இரண்டாவது சுற்றில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலாவை சந்திக்கிறார்.

## கவர்னருக்கு காலக்கெடு விதித்த விவகாரம்:
# ஜனாதிபதி எழுப்பிய கேள்விகளை திரும்ப அனுப்ப வேண்டும்
### சுப்ரீம்கோர்ட்டில் தமிழ்நாடு அரசு பதில் மனு

**புதுடெல்லி, ஜூலை 30-**
மசோதாக்களுக்கு அனுமதி அளிக்காமல் கவர்னர் கிடப்பில் போடப்பட்டதற்கு எதிராக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள் "கவர்னர்கள் அனுப்பி வைக்கும் மசோதாக்கள் மீது ஜனாதிபதி மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும். ஜனாதிபதி மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்காதபட்சத்தில் அதை எதிர்த்து மாநில அரசுகள் சுப்ரீம் கோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்ய முடியும்" எனக் கூறியிருந்தனர். முதன்முறையாக சுப்ரீம் கோர்ட் ஜனாதிபதிக்கு காலக்கெடு நிர்ணயித்தது. ஜனாதிபதிக்கு சுப்ரீம் கோர்ட் காலக்கெடு நிர்ணயிக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில், கவர்னர்கள் அனுப்பும் மசோதாக்கள் மீது 3 மாதங்களுக்குள் ஜனாதிபதிக்கு முடிவெடுக்க காலக்கெடு விதித்தது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டிடம் ஜனாதிபதிக்கு திரவுபதி முர்மு 14 கேள்விகளை எழுப்பியுள்ளார். இது தொடர்பான வழக்கு தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் அடங்கிய 5 நீதிபதிகள் அரசியல் சாசன அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது குடியரசுத் தலைவர் எழுப்பிய 14 கேள்விகள் தொடர்பாக அனைத்து மாநில அரசுகளும் ஒரு வாரத்தில் கருத்து தெரிவிக்க உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில், சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரத்தில், குடியரசுத் தலைவர் எழுப்பிய கேள்விகளை திரும்ப அனுப்ப வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு அரசு சுப்ரீம் கோர்ட்டில் பதில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்த பதில் மனுவில், சுப்ரீம் கோர்ட்டால் ஏற்கனவே அளிக்கப்பட்ட தீர்ப்பை மீறுவதற்காக மாறுவேடத்தில் செய்யப்பட்டதே இந்த மேல்முறையீடு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சொந்த மண்ணில்
# மே.இ.தீவுகள் அணியை ஒயிட் வாஷ் செய்த ஆஸி.




**செயிண்ட் கிட்ஸ், ஜூலை 30-**
மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான கடைசி டி20 போட்டியிலும் வெற்றிபெற்று ஆஸ்திரேலிய அணி 5-0 என்ற கணக்கில் தொடரை வென்று சாதனை படைத்துள்ளது.

**சுற்றுப்பயணம்...**
மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி 3 டெஸ்ட் மற்றும் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. ஏற்கனவே நடைபெற்ற டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலிய அணி முழுமையாக வென்ற நிலையில், டி20 தொடரிலும் 4-0 என்ற கணக்கில் வென்று முன்னிலையில் இருந்தது.

**மே.இ.தீவுகள் பேட்டிங்...**
இந்த நிலையில், ஆறுதல் வெற்றி பெறும் முனைப்போடு மேற்கிந்திய தீவுகள் அணி 5-வது மற்றும் கடைசி டி20 போட்டியில் ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டது. இவ்விரு அணிகள் மோதிய போட்டி செயிண்ட் கிட்ஸ் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி கேப்டன் மிட்செல் மார்ஷ், மேற்கிந்தியத் தீவுகள் அணியை முதலில் பேட்டிங் செய்ய அழைத்தார். அதன்படி, முதலில் பேட்டிங் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 170 ரன்கள் எடுத்தது.

**எல்லீஸ் 2 விக்கெட்...**
அதிகபட்சமாக ஹெட்மையர் 52 ரன்களும் (3 பவுண்டரி, 3 சிக்ஸர்), ரூதர்போர்டு 35 ரன்களும், ஹோல்டர் 20 ரன்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ரன்னில் ஆட்டமிழந்தனர். ஆஸ்திரேலிய அணித் தரப்பில் துவார்ஷியஸ் 3 விக்கெட்டுகளும், நாதன் எல்லீஸ் 2 விக்கெட்டுகளும், மேக்ஸ்வெல், ஸாம்பா, அப்பார்ட், ஆரோன் ஹார்டி தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

**அபார வெற்றி...**
பின்னர், 171 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 17 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 173 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. ஆஸ்திரேலிய அணியில் அதிகபட்சமாக மிட்செல் ஓவன் 37 ரன்களும் (3 பவுண்டரி, 3 சிக்ஸர்), கிரீன் 32 ரன்களும், டிம் டேவிட் 30 ரன்களும், ஆரோன் ஹார்டி 28 ரன்களும், கேப்டன் மார்ஷ் 14 ரன்களும் எடுத்தனர்.

**துவார்ஷியஸ் ஆட்டநாயகன்...**
இதன்மூலம் ஆஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. மேற்கிந்திய தீவுகள் அணித் தரப்பில் அக்கீல் ஹொசைன் 3 விக்கெட்டுகளும், அல்ஜாரி ஜோசப், ஹோல்டர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். 3 விக்கெட்டுகள் வீழ்த்திய பென் துவார்ஷியஸ் ஆட்டநாயகன் விருதையும், கேமரூன் கிரீன் தொடர் நாயகன் விருதையும் வென்றனர்.

**முதல் முறை...**
டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கில் வென்றிருந்த ஆஸ்திரேலிய அணி, டி20 தொடரையும் 5-0 என்ற கணக்கில் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிகளுக்கு எதிராக 5-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி வெல்வது இதுவே முதல் முறையாகவும், உலகளவில் 2வது முறையாகவும் பதிவானது. முன்னதாக, 2020 ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கு எதிரான டி20 தொடரில் இந்திய அணி 5-0 என்ற கணக்கில் வென்றிருந்தது நினைவுகூரத்தக்கது.

## நியூசி. அணிக்கு புதிய கேப்டன்

நியூசிலாந்து கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்க உள்ளது. இதனையடுத்து 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் ஆகஸ்ட் 7-ம் தேதி தொடங்க உள்ளது. 2 போட்டிகளும் புலவாயோவில் நடைபெற உள்ளன. இந்நிலையில் ஜிம்பாப்வேவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியிலிருந்து நியூசிலாந்து அணியின் கேப்டன் டாம் லாதம் விலகியுள்ளார்.

இந்த மாத தொடக்கத்தில் ஏற்பட்ட தோள்பட்டை காயத்திலிருந்து இன்னும் முழுமையாக குணமடையாததால் அவர் இந்த போட்டியிலிருந்து விலகியுள்ளார். இருப்பினும் 2-வது போட்டிக்குள் அவர் முழு உடற்தகுதியை எட்டி விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து முதல் போட்டிக்கான நியூசிலாந்து டெஸ்ட் அணியின் புதிய கேப்டனாக மிச்சேல் சாண்ட்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இங்கி., கேப்டன் முதலிடம்

இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்து விளையாடிய இந்திய மகளிரணி டி20, ஒருநாள் தொடரை வென்று சாதனை படைத்தது. இந்தத் தொடரி இங்கிலாந்து அணி தோல்வியுற்றாலும் அதன் கேப்டன் நாட் ஷிவர் பிரன்ட் சிறப்பாக விளையாடினார். இந்தியாவுக்கு எதிரான இந்த மூன்று ஒருநாள் போட்டிகளில் முறையே அவர் 41, 21 98 ரன்கள் எடுத்தார்.

புதிய ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியல் நேற்று (ஜூலை 29) வெளியானது. இதில், 32 வயதாகும் இங்கிலாந்து கேப்டன் இரண்டு இடங்கள் முன்னேறி முதலிடம் பிடித்துள்ளார். இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா ஓரிடம் பின்தங்கி இரண்டாம் இடம் பிடித்தார். மகளிர் ஒருநாள் ஐ.சி.சி. பேட்டர்கள் தரவரிசை வருமாறு., 1. நாட் ஷிவர் பிரன்ட் - 731 புள்ளிகள், 2. ஸ்மிருதி மந்தனா - 728 புள்ளிகள், 3. லாரா வொல்வார்ட் - 725 புள்ளிகள், 4. எல்லீஸ் பெர்ரி - 684 புள்ளிகள், 5. அலீஸா ஹூலி - 679 புள்ளிகள்.

## ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 1.25 லட்சம் கன அடி நீர்வரத்து

**ஒகேனக்கல், ஜூலை 30-**
கர்நாடக அணைகளில் இருந்து திறந்து விட்ட நீர் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 1.25 லட்சம் கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு முன்கூட்டியே தொடங்கி பெய்து வருகிறது. குறிப்பாக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான குடகு, கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் தொடர் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. இதனால் கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்.) அணையும், கபினி அணையும் நிரம்பி விட்டன. நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு கே.ஆர்.எஸ். மற்றும் கபினி அணைகளில் இருந்து தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 1 லட்சத்து 23 ஆயிரத்து 794 கன அடியாக அதிகரித்தது. இந்த தண்ணீர், கர்நாடக-தமிழக எல்லையான பிலிகுண்டுலு வழியாக காவிரி ஆற்றில் கரைபுரண்டு தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு வந்து கொண்டிருக்கிறது. நீர்வரத்து அதிகரிப்பால் காவிரி ஆற்றில் இருக்கரையும் தொட்டப்படி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. இந்த நிலையில் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நேற்று முன்தினம் காலை 1 லட்சத்து 05 ஆயிரம் கனஅடி வந்தது. பின்னர் படிபடியாக நீர்வரத்து உயர்ந்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 1 லட்சத்து 25 ஆயிரம் கன அடியாக அதிகரித்து வந்தது. நீர்வரத்து அதிகரிப்பால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீரில் முழ்கின. மெயின் அருவிக்கு செல்லும் நடைபாதைக்கு மேல் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேலும் கர்நாடகா அணைகளில் இருந்து நீர் திறப்பு அதிகளவு திறக்கப்பட்டு உள்ளதால் ஒகேனக்கல்லுக்கு மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சினிமா CINI செய்திகள்

## ‘சக்தித் திருமகன்’ – ஒரு அரசியல் புரோக்கரின் கதை




விஜய் ஆண்டனி நடிப்பில், அருண் பிரபு இயக்கத்தில், விரைவில் வெளியாக இருக்கும் படம் சக்தித் திருமகன். இப்படத்தின் இரண்டு பாடல்கள் மற்றும் டீசர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் படக்குழுவினருடன் தயாரிப்பாளர் தனஞ்செயன் கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் நாயகனும் தயாரிப்பாளருமான விஜய் ஆண்டனி பேசுகையில், இந்த சக்தித் திருமகன் படம் ஒரு அரசியல் புரோக்கரின் கதையாகும், தமிழ் சினிமாவில் டாப் 5 படங்களில் அருவி ஒரு படம்.

அதே போல் இந்திய அளவில் டாப் 3 இயக்குனர்களில் அருண் பிரபு ஒருவர். சர்வதேச அளவில் படம் எடுக்கக் கூடிய வல்லமை அவருக்கு இருக்கிறது என்று கூறினார்.

தயாரிப்பாளர் தனஞ்செயன் பேசுகையில், நாம் அனைவரும் பார்த்து வியந்த ஒரு இயக்குனர் தான் அருண் பிரபு. இப்படத்தை சிறப்பாக இயக்கியுள்ளார். இதற்கு முன் அவர் இயக்கிய அருவி மற்றும் வாழ் படத்திலிருந்து இப்படம் மாறுபட்டு இருக்கும் என்றார்.

## மீண்டும் களமிறங்கும் நடிகர் அப்பாஸ்



1990 மற்றும் 2000 ஆண்டுகளில் தனது நடிப்பால் ரசிகர்களை வசீகரித்த நடிகர் அப்பாஸ், 10 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் சினிமாவிற்கு வருகிறார். ஜி.வி. பிரகாஷுடன் இணைந்து, தற்போது பெயரிடப்படாத ஒரு புதிய படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். பியாண்ட் பிக்சர்ஸ் ஜெயவர்த்தனன் இப்படத்தினை தயாரிக்க, ஜெய்காந்த் சுரேஷ் இணை தயாரிப்பாளராக களம் இறங்குகிறார்.

அறிமுக இயக்குனர் மரியா ராஜா இலஞ்செழியன் இப்படத்தை இயக்குகிறார். ஸ்ரீ கௌரி பிரியா கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது வேகமாக நடைபெற்று வருகிறது. இது ஒரு நகைச்சுவை நிரம்பிய குடும்பப் படமாக இருக்கும் என இப்படத்தின் இயக்குனர் மரியா ராஜா இலஞ்செழியன் தெரிவித்தார். படத்துக்கு இசை – ஜஸ்டின் பிரபாகரன், ஒளிப்பதிவு – மதன் கிறிஸ்டோபர், படத்தொகுப்பு – செல்வா ஆர்.கே, ஆர்ட் டைரக்‌ஷன் – குமார் கங்கப்பன், ஆடை வடிவமைப்பு – பிரவேண் ராஜா.

## மேலூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**மேலூர், ஜூலை 30-**
பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளில் சேவை திட்டங்களை அவர்களது இல்லங்களுக்கு சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்னும் இந்த புதிய திட்டம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். அதில் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிக்கு உட்பட்ட 1,2,3, வது வார்டுகளை சேர்ந்த பொது மக்களுக்கு அழகர் கோவில் ரோட்டில் உள்ள லதா திருமண மண்டபத்தில் முகாம் நடைபெற்றது. உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் 571 பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டன.

இம்முகாமில் மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணவேணி மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை, மேலூர் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் லயனல் ராஜ்குமார், நகராட்சி துணைத் தலைவர் இளஞ்செழியன், நகராட்சி பொறியாளர் முத்துக்குமார், மேலாளர் மாதவன், நகர்மன்ற உறுப்பினர்கள், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள், நகராட்சி பணியாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ராஷ்மிகா மந்தனா நடிக்கும் ‘மைசா’




Unformula Films தயாரிப்பில், ராஷ்மிகா மந்தனா முதன்மை வேடத்தில் நடிக்கும் பான் இந்தியா திரைப்படமான “மைசா” படத்தின் படப்பிடிப்பு தொடங்கியது.

ரவீந்திர புள்ளே இயக்குநராக அறிமுகமாகும் இந்தப் படம் சமீபத்தில் பூஜையுடன் பிரமாண்டமாகத் தொடங்கப்பட்டது, இதில் படக் குழுவினர் கலந்து கொண்டனர். சுரேஷ் பாபு கிளாப் போர்டு அடிக்க, ரவி கிரண் கோலா கேமராவை இயக்கினார்.

படத்தின் வழக்கமான படப்பிடிப்பு நேற்று ஹைதராபாத்தில் தொடங்கியது. கோண்ட் பழங்குடியினரின் கலாச்சார பின்னணியில் உருவாகவுள்ள “மைசா” படத்தில் ராஷ்மிகா மந்தனா முற்றிலும் மாறுபட்ட பாத்திரத்தில் நடிக்கிறார். இப்படத்தில், ஷ்ரேயாஸ் P. கிருஷ்ணா ஒளிப்பதிவையும் சண்டைக் காட்சிகளை ஆண்டி லாங்கும் அமைக்கிறார்கள்.

## ராமேசுவரம் கோவிலில் சுவாமி அம்பாள் மாலை மாற்றுதல் நிகழ்ச்சி



**ராமேசுவரம், ஜூலை 30-**
ராமேஸ்வரம் ராமநாத சாமி திருக்கோவிலில் ஆடித் திருவிழா நிகழ்ச்சி நடைபெற்று வருவதையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை ராமநாதசாமி பர்வதவரத்தினி அம்மன் மாலை மாற்றுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் ராமநாதசாமி திருக்கோவிலில் ஆடித்திருவிழா நிகழ்ச்சி ஜூலை 19ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனையடுத்து திருவிழாவின் 11 ஆம் நாள் நிகழ்ச்சியான ராமநாதசுவாமி,பர்வதவர்த்தினி அம்பாள் மாலை மாற்றுதல் நிகழ்ச்சி திருக்கோவிலின் ராம தீர்த்தம் தெருவில் அமைந்துள்ள மண்டகப்படியில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை ஒட்டி நேற்று அதிகாலையில் திருக்கோவில் நடைகள் திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் மற்றும் ஸ்படிகலிங்க பூஜைகள் நடைபெற்றது அதன் பின்னர் பர்வதவர்த்தினி அம்மன் காலை 7 மணியளவில் மலர் அலங்காரத்துடன் புறப்பாடாகி மண்டகப்படிக்கு வருகை தந்தது.

பின்னர் பகலில் திருக்கோவிலுக்கு சென்று ராமநாத சாமி அழைத்து அழைத்து மீண்டும் மண்டகப் படிக்கு வருகை தந்து பக்தர்களுக்கு காட்சியளிந்தனர். பின்னர் மாலை இரண்டு மணி முதல் மூன்று மணிக்குள் மாலை மாற்றுதழ் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிகள் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை கண்டு கழித்து சாமி தரிசனம் செய்தனர். திருவிழாவிழாவின் 12ஆம் நாள் நிகழ்ச்சியான இன்று புதன் கிழமை இரவு 7 மணிக்கு திருக்கோவிலின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள திருக்கல்யாணம் மண்டபத்தில் ராமநாத சாமிக்கும் பர்வதவர்த்தினி அம்மனுக்கும் திருக்கல்யாண உற்சவ நிகழ்ச்சிகள் நனைபெறவுள்ளது.

## வேதாளை: பிள்ளைக்காத்த காளியம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர வளைகாப்பு விழா



**ராமேசுவரம், ஜூலை 30-**
வேதாளை அருகேயுள்ள குஞ்சார் வலசை கிராமத்தில் ஸ்ரீ பிள்ளைக்காத்த காளியம்மன் கோவிலில் ஆடிப்பூர வளைகாப்பு நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம்,வேதாளை ஊராட்சி குஞ்சார் வலசை கிலாமத்தில் ஸ்ரீ பிள்ளைக்காத்த காளியம்மன், ஸ்ரீகோட்டைமுனி கருப்பணசாமி ஆலயம் உள்ளது.இந்த ஆலயத்தில் ஆடிப்பூரம் தினத்தையொட்டி வளைகாப்பு நிகழ்ச்சி நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ பிள்ளைக்காத்த காளியம்மனுக்கு வளையல்களால் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் தீபாராதணைகள் நடைபெற்றது. ஆடிப்பூர வளைகாப்பு நிகழ்ச்சியில் பெண்கள் 7 வகை உணவு தயாரித்து அம்மனுக்கு படைத்தனர்.

விழாவில் குழந்தை வரம் வேண்டிய பெண்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் ஏராளமான பெண்கள் கலந்துகொண்டனர் அவர்களுக்கு பெண்கள் வளையல்கள் அணிவித்தனர். மேலும் அனைவருக்கும் 7 வகையான சாதம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தர்மகர்த்தா சரவணன், கோவில் கமிட்டித் தனசேகர், செயலாளர் முருகேசன், பொருளாளர் சக்தி வடிவேல் முருகன், கௌரவத் தலைவர் ராமமூர்த்தி, செந்தில் குமார் மற்றும் நிர்வாகத்தினர் ஆகியோர் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## ‘சட்டமும் நீதியும்’ தொடரின் நன்றி அறிவிப்பு விழா




18 கிரியேட்டர்ஸ் சசிகலா பிரபாகரன் தயாரிப்பில், அறிமுக இயக்குநர் பாலாஜி செல்வராஜ் இயக்கத்தில், சரவணன் நடிப்பில் ZEE5 ல் கடந்த ஜூலை 18 ல் வெளியான ‘சட்டமும் நீதியும்’ சீரிஸ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது. இத்தொடர் ZEE5ல் 51 மில்லியன் பார்வைகளைக் கடந்து சாதனை படைத்துள்ளது.

தமிழில் வெற்றியைத் தொடர்ந்து தெலுங்கு இந்தி மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வினில் நடிகர் சரவணன் பேசியதாவது... 90 களில் நான் ஹீரோவாக வந்த போது, அத்தனை பத்திரிக்கையாளர்களும் மிகப்பெரிய ஆதரவு தந்தார்கள்.

இந்த சீரிஸ் வெற்றி பெற்ற பிறகும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் பிரபாகரனுக்கு அவர் மனைவிக்கும் என் நன்றி என்றார். இந்த வெற்றிக்கு காரணமான பத்திரிக்கை ஊடக நண்பர்களுக்கு மீண்டும் நன்றி என்றார். இயக்குநர் பாலாஜி செல்வராஜ் பேசியதாவது...

சூரி தான் இந்த வாய்ப்பை வாங்கித் தந்தார். சரவணன் அவர்களை நன்றாக கவனித்துக்கொள்ள வேண்டும் என நினைத்தோம், ஆனால் அவர் தான் எங்களை பார்த்துக் கொண்டார் அவருக்கு நன்றி. கேமராமேன் கோகுல், இசையமைப்பாளர், எடிட்டர் எல்லோருக்கும் நன்றி என்றார்.

## தமிழகத்தில் தெரு நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்திட மாவட்டம் தோறும் கண்காணிப்புக்குழு



**வத்தலகுண்டு, ஜூலை 30-**
தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள், தெருவோர அனாதையாக வாழும் விலங்குகளின் நலன் மற்றும் உரிமைகளுக்காக செயல்படும் நிறுவனத்தின் துணைத் தலைவர் அண்ணாதுரை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:- கடந்த பத்து ஆண்டுகளில் தெருவோர நாய்களின் கருத்தடைகள் முறையாக மேற்கொள்ளப் டாததால் இனப்பெருக்க அதிகமாகி ஏராளமான பிரச்சனைகள் ஏற்பட்டு வருகிறது.

இதனை கருத்தில் கொண்ட தமிழக அரசு தெரு நாய்கள் மற்றும் வெறி நாய்களாக மாறுவதாக அதனை கருணை கொலை செய்வதற்கு தமிழக அரசு உத்தரவு பெற்று இருப்பதாக ஒரு செய்தியை அறிந்தோம். அதன் அடிப்படையில் விலங்குகள் நல கூட்டமைப்பு சார்பாக தமிழகத்தில் பன்முகத் தன்மை கொண்ட கால்நடை மருத்துவமனைகள் 2 ஆயிரத்திற்கும் உள்ளது. இதில் மருத்துவர்கள் உதவியாளர்களிட பணியில் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் இந்தப் பெரிய கட்டமைப்பை உருவாக்கியும் விலங்குகளை ஈவு இரக்கமில்லாமல் கொலை செய்ய உத்தரவிடுவது விலங்குகள் உரிமைகளுக்கு எதிரான என்பதை வலியுறுத்துகிறோம்.

தெருவோர விலங்குகள் மனிதர்கள் மோதலுக்கான பின்புலத்தையும் பின்னணியும் நம் ஆராய வேண்டும். வள்ளலார் பல்லுயிர் காப்பகத் திட்டத்தின் மூலம் விலங்குகள் நலனுக்காக தன்னார்வ அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட 20 கோடி அளவிலான நிதிகளில் முறைகேடு ஏற்பட்டுள்ளதாக தகவல் கிடைக்கின்றன. இந்த அமைப்புகள் மூலமாக முறையாக கருத்தடைகள் செய்யாமல் இருந்த காரணத்தாலும் பல்வேறு பல்வேறு உணவுகள் தண்ணீர் உள்ளிட்ட அதியவாசிய பொருட்கள் கிடைக்காத காரணத்தாலேயே நாய்கள் அவதிக்குள்ளாகிறது. இதனால் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்படுகின்ற ஒரு மோதலால் நாய்கள் தொல்லை அதிகமாக இருப்பதால் பொதுமக்கள் மத்தியில் நாய்களை எதிரிகளாக பார்க்கின்றனர்.

எனவே அரசு அதிகாரிகள் இதனை சரி செய்ய பல்வேறு இடங்களில் நாய்கள் வாழும் இடத்திலிருந்து மலை பகுதிகளுக்கு கொண்டு போய் விட்டு விடுதல், சில நேரங்களில் கொன்று புதைத்து விடுதல் இது போன்ற நிலையை தவிர்க்க விலங்குகள் நலன் என்ற பெயரில் விளங்குகளுக்காக அரசு ஒதுக்கப்பட்ட பணத்தை பெற்று முறை கேட்டில் ஈடுபடும் அமைப்புகள் அடையாளம் கண்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும், தெருவோர நாய்கள் மனிதர்களுக்குள்ள பிணக்குகள் மற்றும் தொடர்பான குறைகளை ஆய்வு செய்ய தனி குழு அமைத்தல் வேண்டும், மாவட்ட அளவில் விலங்குகள் ஆர்வலர்கள், வல்லுநர்கள் மற்றும் கால்நடை மருத்துவரிடம் ஒரு முறையான கலந்தாய்வு கூட்டம் நடத்த வேண்டும், தெருவோர நாய்கள் கருத்தடைக்கு பயிற்சி பெற்ற தன்னார்வலை அதிகப்படுத்தி கருத்தடை செயல்பாடுகளை அதிகரிக்க வேண்டும்,

மாவட்டம் தோறும் கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும், பல்வேறு இடங்களில் வெப்ப காலங்களில் தெருக்களில் தண்ணீர் தொட்டிகள் அமைக்க வேண்டும், விலங்குகள் நல அமைப்புகளை ஒருங்கிணைந்து விரிவான செயல் திட்டம் மற்றும் கொள்கை வடிவமைத்தல் வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் விலங்குகளுக்கும்,மனித சமுதாயத்திற்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளை தவிர்க்க முடியும் எனவே அரசு கருணை மற்றும் நியாயமான நடவடிக்கை எதிர்நோக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த அறிக்கை வெளியிட்டனர். இந்த வெளியிட்ட போது உடன் தமிழ்நாடு புதுச்சேரி விலங்குகள் நல கூட்டமைப்பு தலைவர் ஜெரால்டு, நல அமைப்பு மாவட்ட பொறுப்பாளர் சக்திவேல் உள்பட பலர் இருந்தனர்.

## ‘சரண்டர்’ பட இசை வெளியீட்டு விழா




வி.ஆர்.வி.குமார் தயாரிப்பில், அறிமுக இயக்குநர் கௌதம் கணபதி இயக்கத்தில், தர்ஷன் நாயகனாக நடிக்கும் படம் “சரண்டர்”. ஆகஸ்ட் 1 ஆம் தேதி திரைக்கு வரவுள்ள நிலையில், இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வினில்,

இப்படத்தின் இயக்குனர் கௌதம் கணபதி பேசியதாவது... ‘ இப்படத்தை மிக நேர்மையாக எடுத்துள்ளோம். படத்தில் பாட்டு இல்லை, தேவைப்படவில்லை, தர்ஷனும் எனக்கு இது மாதிரி வேண்டும் என எதையுமே கேட்கவில்லை. கேமராமேன், எடிட்டர், இசை என எல்லாமே அறிவழகன் சாரிடமிருந்து வந்தவர்கள் தான்.

ஒரு டீமாக எல்லோரும் உழைத்துள்ளோம். படம் மிக நேர்த்தியாக வந்துள்ளது. இப்படத்திற்கு உங்கள் ஆதரவைத் தாருங்கள் நன்றி’ என்றார்.

தர்ஷன் நாயகனாக நடித்துள்ள இப்படத்தில், பாடினி குமார் நாயகியாக நடித்துள்ளார். இவர்களுடன் மன்சூர் அலிகான், லால், சுஜித் ஷங்கர், முனிஷ் காந்த் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

## ஆகஸ்ட் 1 ல் வெளியாகும் ‘ஹவுஸ் மேட்ஸ்’




சிவகார்த்திகேயன் வழங்கும் ராஜவேல் இயக்கத்தில் நடிகர்கள் தர்ஷன், காளி வெங்கட், ஆர்ஷா பைஜூ உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் ‘ஹவுஸ் மேட்ஸ்’. ஆகஸ்ட் 1 அன்று திரையரங்குகளில் வெளியாக இருக்கும் இந்தப் படத்தின் ப்ரீ ரிலீஸ் ஈவண்ட் சமீபத்தில் நடைபெற்றது. அப்போது பேசிய இயக்குநர் ராஜவேல், “ இந்த படம் சாதாரணமாக தான் ஆரம்பித்தது.

ஆனால், இவ்வளவு பெரிய மேடை இந்த படத்திற்கு அமைந்தது சிவகார்த்திகேயன் புரொடக்‌ஷன் தான் காரணம்.

படத்தில் சின்ன சின்ன சர்ப்ரைஸ் இருக்கிறது என்றார். பின்னர் பேசிய காளி வெங்கட், “எனக்கு மட்டுமல்ல, பார்வையாளர்களுக்கும் இது முக்கியமான படமாக இருக்கும். என்னை நம்பி இந்தக் கதாபாத்திரம் கொடுத்த இயக்குநருக்கு நன்றி என்றார்.

பின்னர் பேசிய தர்ஷன், டிரெய்லரைப் பார்த்துவிட்டு நிறைய பேர் ஹாரர் படமா என்று கேட்டார்கள். அதையும் தாண்டி என்கேஜிங்கான திரைக்கதையும் ஆச்சரியங்களும் கொண்ட ஃபேமிலி எண்டர்டெயின்மெண்ட் படமாக இது இருக்கும் என்றார்.



● சென்னை கீழ்பாக்கம் நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் பாரா பாட்மிட்டன் மைதானம் அமைக்கப்பட்டு வரும் பணியினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் கூடுதல் தலைமைச்செயலாளர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

## சென்னையில் பாரா விளையாட்டு மைதானம்:

# துணை முதல்வர் உதயநிதி நேரில் ஆய்வு

சென்னை, ஜூலை 30-

நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் பாரா பாட்மிட்டன் மைதானம் அமைக்கப்பட்டு வரும் பணியினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பாரா-விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில் நாட்டிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் சென்னையில் நேரு பூங்கா விளையாட்டு வளாகத்திலும் மற்றும் திருச்சி, மதுரை, கடலூர் திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய 6 மாவட்ட விளையாட்டரங்கங்களில் மொத்தம் ரூ.7.38 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை, கீழ்பாக்கம் நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் பாரா பாட்மிட்டன் மைதனம் அமைக்கப்பட்டு வரும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, அனைத்து பணிகளையும் தரமாகவும், குறிப்பிட்ட கால அளவிலும் செய்து முடித்து விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அலுவலர்களிடம் அவர் வலியுறுத்தினார்.

சென்னை, நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் அரைவட்ட திறந்தவெளி மேற்கூரை கொண்ட பாரா இறகுப்பந்து ஆடுகளம், உட்கார்ந்து விளையாடும் பாரா கையுந்துபந்து ஆடுகளம், பாரா டேபிள் டென்னிஸ் ஆடுகளம், பாரா போச்சியா ஆடுகளம் உள்ளிட்டவை அமைக்கப்பட்டு வருகிறது.

# தாக்குதலை நிறுத்துமாறு...(1-ம் பக்க தொடர்ச்சி)

தொலைதூர பகுதிக்குள் சென்று இந்திய ராணுவம் தாக்குதல் நடத்தியது.

ராணுவத்திற்கு முழு அளவில் சுதந்திரம் அளிக்கப்பட்டது. எந்த பகுதியில், எப்போது, எப்படி பதில் தாக்குதல் நடத்த வேண்டும் என ராணுவமே முடிவு செய்தது. தாக்குதலை நிறுத்துமாறு எந்த உலகத்தலைவர்களும் கூறவில்லை. தாக்குதை நிறுத்துமாறு பாகிஸ்தான் நம்மிடம் கெஞ்சியது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட டிரோன்கள், ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டு, பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன.

முப்படைகளும் கூட்டாக இணைந்து திட்டமிட்டு செயல்பட்டன. அந்நாட்டின் விமான தளங்களில் தாக்குதல் நடத்தப்பட்டது. முன்பு தாக்குதல் நடத்தியவர்கள், அடுத்த தாக்குதலுக்கு திட்டமிட்டனர்.

ஆனால், தற்போது, பயங்கரவாத தாக்குதல் நடத்த எண்ணுபவர்களுக்கு தூக்கம் போய் விட்டது. இந்த பதிலடிக்கு, இந்தியாவின் தற்சார்பு தொழில் நுட்பங்கள் கைகொடுத்தன.

ஆபரேஷன் சிந்தூர் மூலம் உலகமே இந்தியாவின் வலிமையை உணர்ந்துள்ளது என்று அவர் பேசியுள்ளார்.



● சென்னை எழிலக வளாக மாநில அவசர செயல்பாட்டு மையத்தில் நேற் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச்செயலாளர்கள் மு.சாய்குமார், பெ.அமுதா, நில நிருவாக ஆணையர் கே.எஸ்.பழனிசாமி, கூடுதல் ஆணையர் ச.நடராஜன், ஆணையர் சிஜிதாமஸ் வைத்யன், இயக்குநர் க.வீ.முரளீதரன், ஆணையர் ப.மகேஸ்வரி, நிலஅளவை திட்ட இயக்குநர் ராஜகோபால் சுங்கரா ஆகியோர் கலந்து கொண்டனர்.



● சென்னை பெருநகர் வளர்ச்சி குழும அலுவலக கூட்டரங்கில் நேற்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும், சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் "முதல்வர் படைப்பகங்கள்" விரைவில் பணிகள் தொடங்குவது குறித்தும் மற்றும் அப்பணிகளுடன் சேர்ந்து நடைபெற்று வரும் இதர பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச்செயலாளர் கோ.பிரகாஷ், அ.சிவஞானம், எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியம், ந.ரவிக்குமார், மகாவிஷ்ணு, ராஜமகேஷ்குமார், பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடி 5 விளக்கு பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மத்தியில் அவர் பேசிய காட்சி.

## ஜம்மு-காஷ்மீரில் கொல்லப்பட்ட

# 3 பயங்கரவாதிகளும் பஹல்காம் தாக்குதலில் தொடர்புள்ளவர்கள்

## பாராளுமன்றத்தில் அமித்ஷா விளக்கம்



டெல்லி, ஜூலை 30-

பாகிஸ்தானுக்கு நற்சான்றிதழ் தர காங்கிரஸ் தலைவர் ப.சிதம்பரம் முயற்சிக்கிறார் என உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார். காஷ்மீரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட ஆபரேஷன் மகாதேவ் தேடுதல் வேட்டையில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். சுட்டுக்கொல்லப்பட்ட இந்த 3 பயங்கரவாதிகளும் பஹல்காம் தாக்குதலில் தொடர்புடையவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து மே 7ம் தேதி இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது.

இதனிடையே, ஆபரேஷன் சிந்தூர் குறித்து பாராளுமன்றத்தின் மக்களவையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று முன்தினம் உரையாற்றினார். அதேவேளை, நேற்று முன்தினம் மதியம் காஷ்மீரில் பாதுகாப்புப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த பயங்கரவாதிகள்தான் பஹல்காம் தாக்குதல் நடத்தியதாகவும், அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்புப்படையினர் நேற்று தெரிவித்தனர். இந்நிலையில், ஆபரேஷன் சிந்தூர், பஹல்காம் தாக்குதல் குறித்து மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித்ஷா நேற்று உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது, காஷ்மீரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட ஆபரேஷன் மகாதேவ் தேடுதல் வேட்டையில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். சுட்டுக் கொல்லப்பட்ட இந்த 3 பயங்கரவாதிகளும் பஹல்காம் தாக்குதலில் தொடர்புடையவர்கள் ஆவர்.

பஹல்காம் தாக்குதலில் பாகிஸ்தானுக்கு நற்சான்றிதழ் தர காங்கிரஸ் தலைவர் ப.சிதம்பரம் முயற்சிக்கிறார். பஹல்காம் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் இருந்து வந்தவர்களா? என்பதற்கு ஆதாரத்தை ப.சிதம்பரத்தை கேட்கிறார். பஹல்காம் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதற்கு எதிர்க்கட்சியினர் மகிழ்ச்சியடைவார்கள் என நினைத்தேன். ஆனால், எதிர்க்கட்சியினர் கவலையடைந்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மகளிர் உரிமைத்தொகை கோரி 5.88 லட்சம் பேர் விண்ணப்பம்

## தமிழ்நாடு அரசு தகவல்

சென்னை, ஜூலை 30-

`உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் 5.88 லட்சம் பேர் மகளிர் உரிமைத் தொகை கோரி மனுக்கள் வழங்கியுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும் அவர்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள்/திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்கும் நோக்கில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை கடந்த ஜூலை 15 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலின், கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்தார்.

வருகிற நவம்பர் மாதம் வரை தமிழ்நாடு முழுவதும் அனைத்து இடங்களிலும் நடைபெறும் இந்த திட்டத்தில் மக்கள் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளிக்கலாம் என்றும் மகளிர் உரிமைத் தொகைக்கும் விண்ணப்பிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்கள் மூலம் இதுவரை 12.65 லட்சம் மனுக்கள் பெறப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு தகவல் தெரிவித்துள்ளது.

இதில் 5.88 லட்சம் பேர் மனுக்கள் மகளிர் உரிமைத் தொகை கோரி வழங்கப்பட்டுள்ளன. மனு அளித்து 45 நாள்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## எதிக்கட்சிகள் கடும் அமளி:

# மாநிலங்களவை ஒத்திவைப்பு

டெல்லி, ஜூலை 30-

எதிக்கட்சிகள் அமளியால் மாநிலங்களவை நேற்று மதியம் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21ம் தேதி தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்கியதுமுதல் பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி ஆகிய விவகாரங்களை விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டு வந்தனர். இதனால், கடந்த வாரம் முழுவதும் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் முடங்கின.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் குறித்த விவாதம் பாராளுமன்றத்தின் மக்களவையில் நேற்று முன்தினம் மதியம் 12 மணிக்கு தொடங்கியது. ஆபரேஷன் சிந்தூர் குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோர் மக்களவையில் உரையாற்றினர்.

இந்நிலையில், பாராளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்று காலை 11 மணிக்கு கூடியது. இதில் ஆபரேஷன் சிந்தூர் குறித்து மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித்ஷா உரையாற்றினார். ஆனால், மாநிலங்களவையில் எதிர்க்கட்சியினர் கடும் அமளியில் ஈடுபட்டனர். பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி குறித்து விவாதிக்கக்கோரி மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன. ஆனால், எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை மாநிலங்களவை துணை சபாநாயகர் ஹரிவன்ஸ் நிராகரித்தார். இதனால், எதிர்க்கட்சி எம்.பி.கள் மாநிலங்களவையில் அமளியில் ஈடுபட்டனர். அமளியை தொடர்ந்து மாநிலங்களவை மதியம் 2 மணிவரை ஒத்தி வைக்கப்படுவதாக அவை துணைத்தலைவர் அறிவித்தார்.

## பெருமளவில் வாக்காளர்களை நீக்கினால் தலையிடுவோம்:

# பீகார் வாக்காளர் பட்டியல் விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்

புதுடெல்லி, ஜூலை 30-

பீகார் வாக்காளர் பட்டியலில் பெயர்கள் பெருமளவில் நீக்கப்பட்டால் நாங்கள் உடனடியாக அதில் தலையிடுவோம் என சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலுக்கு சில மாதங்களே இருக்கும் நிலையில் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி நடைபெற்று வருகிறது. இந்த திருத்தப் பட்டியல் வரும் ஆகஸ்ட் 1-ம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணியை எதிர்த்து காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதா தளம், திரிணமூல் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், ஏடிஆர் தொண்டு நிறுவனம் உட்பட பல்வேறு தரப்பில் 11 மனுக்கள் சுப்ரீம் கோர்ட்த்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சூர்ய காந்த், ஜோய்மல்யா பக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மனுதாரர்கள் தரப்பில் மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், பிரசாந்த் பூஷன் உள்ளிட்டோர் ஆஜராகினர். தேர்தல் ஆணையம் சார்பில் மூத்த வழக்கறிஞர் ராகேஷ் திவேதி ஆஜரானார்.

மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கபில் சிபல் "வரைவு வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்ட பெயர்கள் அடங்கிய பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும். அப்போதுதான், அவர்கள் யார் என்பது குறித்து நாங்கள் தெரிந்துகொள்ள முடியும். என வாதிட்டார். இதற்கு பதில் அளித்துப் பேசிய ராகேஷ் திவேதி, நீக்கப்பட்ட பெயர்கள் குறித்த பட்டியல் இணையதளத்தில் இருந்து தெரிந்துகொள்ள முடியும் என தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி ஜோய்மல்யா பக்சி, "தேர்தல் ஆணையம் ஓர் அரசியலமைப்பு நிறுவனம். அது சட்டத்தின்படி சரியாகச் செயல்படும் என்ற எண்ணம் உள்ளது. ஒருவேளை அவர்கள் அதில் இருந்து விலகுவார்களேயானால், வாக்காளர் பட்டியலில் பெயர்கள் பெருமளவில் நீக்கப்பட்டால் நாங்கள் நிச்சயம் தலையிடுவோம்" என தெரிவித்தார்.

இதையடுத்து, வழக்கின் அடுத்த விசாரணை ஆகஸ்ட் 12 மற்றும் 13 ஆகிய தேதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.